IM-A530-25

அன்பு மலர் - கரு

# புத்தர் கருணை

3995

சுத்தானந்தபாரதி.

அன்பு மலர் - ௧௫

உ

# புத்தர் கருணை

A. SIRUVAYAL.
RAMNAD DIST.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

V. PE. PL.
PAGANERI.

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
1938
விலை அணா எட்டு

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை,
சென்னை

*All - rights reserved by*
*The Anbu Nilayam,*
*Ramachandrapuram*
*(Trichy Dt.)*

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

# பதிப்புரை

எமது நிலயத்தின் 13-வது அன்பு மலரைக் கருணை வள்ளலின் மலரடியில் வைத்து வணங்குகிறோம். 'புத்தர் கருணை' என்னும் இந்நூல் சுவாமி சுத்தானந்தபாரதியார் எழுதிய அரிய நாடக மணியாகும். இவர் சில காலம் பௌத்த துறவிகளுடனிருந்து அம்மதத்தைப் பயின்றவர். இந்நூலில் புத்தரின் அன்பும், இரக்கமும், துறவும், அறிவும், தவமும், புத்த தருமமும் நன்கு விளங்கும்.

புத்தரின் எல்லையற்ற அருளும் கருணையும் கண்டு உருகியே இன்று 50 கோடி மாந்தர் அவரை வணங்குகின்றனர். இந்தியா, இலங்கை, பர்மா, சீனம், ஜப்பான், மலயா, ரஷ்யா முதலிய நாடுகளில் பௌத்த மதம் பரவியுள்ளது. புத்தர் பொது ஜனங்களுக்குப் புரியும்படியான பாலி பாஷையே பேசினார்; பொது நலத்திற்கே வாழ்ந்தார். அவர் கடவுளையறிய முயலவில்லை; ஆசைத்தளையிற் சிக்கி மயங்கும் மாந்தர் துயர் தீரும் மருந்தை யறியவே முயன்றார்.

லைட் ஆஃப் ஏஷ்யா, மணிமேகலை, புத்த சரிதம், தம்ம பாதம், புத்தர் சம்பாஷணைகள், ஜாதகமாலை, ஜாதகக் கதைகள், நாகானந்தம் முதலிய நூல்களை ஆதாரமாகக் கொண்டும், ஆசிரியர் பௌத்த துறவிகளுடன் வாழும்போது கிடைத்த குறிப்புக்களைக் கொண்டும் இந்நாடகம் எழுதப்பெற்றது.

இந்தச் சீவகாருண்ய நாடகத்தை வெளியிட முன் வந்து, ஆர்வத்துடன் பொருளுதவி செய்த திருவாளர், தென் இந்தியாவில் காரைக்குடி வாசியான க. இராம சாமி பிள்ளையவர்கள் ஆவர். இவ்வன்பர், இப்போது மலாய் நாட்டைச் சேர்ந்த ஈப்போ என்னும் ஊரில் தொழிலில் ஈடுபட்டுள்ளார். இவர் தமிழன்பும், சீவ காருண்யமும், தாராளமான மனமும் உள்ளவர். இவருக்கு விவேகானந்தன் என்னும் ஓர் அற்புதக் குழந்தை யிருந்தது. அது ஐந்தாண்டிலேயே ஞான மொழி பேசத் தொடங்கிற்று. அம்மை நோய் வந்து அக்குழந்தையை அள்ளிச்சென்றது பரிதபிக்கத்தக் கது. "அப்பா, எனக்கோரு ஆனந்த மடம் கட்ட வேண்டும்" என்று அக்குழந்தை இறுதியிற் சொன்ன தாம். தந்தையார் தமது செல்வனுக்கு ஆனந்தர் குருவா கிய புத்தரின் கருணையை விளக்கும் இந்நாடகத்தை ஓர் ஆனந்த நிலயமாக அளிக்கிறார். காலஞ்சென்றவர் பெயரால் சடங்குகள் செய்வதினும், ஓர் அரிய நூல் வெளியிட்டுத் தமிழ்ப்பணியும், ஞானப்பணியும் ஒருங்கே புரிந்த இந்த அன்பருக்கு எமது நன்றி யுரித்தாகுக !

புத்தர் உலகமஹான் ; கருணைவடிவு ; கருணைக் குச் சாதிமதமில்லை ; அதன் ஊற்று தூயவுள்ளம். ஆத லின் கருணை விளக்கத்தையே பொருளாகக் கொண்ட இந்நாடகம் எம்மதத்திற்கும் சம்மதமாகுக !

எமது வெளியீடுகளை ஆதரிக்கும் அன்பர்களுக்கு ஜீவகாருண்ய பகவான் இன்பமருளுக !

அன்பு நிலயத்தார்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | iii |
| | நாடக பாத்திரர்கள் | ... | vii |
| 1. | சித்தார்த்தன் இரக்கம் | ... | 1 |
| 2. | சுத்தோதனன் சூழ்ச்சி | ... | 5 |
| 3. | காதலர் கண்கள் | ... | 10 |
| 4. | வீரப்போட்டி | ... | 16 |
| 5. | இன்ப வனம் | ... | 18 |
| 6. | பறை சாற்றல் | ... | 27 |
| 7. | கிழவன் கதை | ... | 28 |
| 8. | கனவும் துறவும் | ... | 35 |
| 9. | கான் புகல் | ... | 43 |
| 10. | பிக்ஷை | ... | 44 |
| 11. | உயிர் இரக்கம் | ... | 48 |
| 12. | ஜீவகாருண்யம் | ... | 51 |
| 13. | உயிர்ப்பலி நிறுத்தல் | ... | 61 |
| 14. | கயாக் காடு | ... | 67 |
| 15. | புத்த ஞாயிறு | ... | 77 |
| 16. | மங்களம் | ... | 83 |

3495

# நாடக பாத்திரங்கள்

1. சுத்தோதனன்—சாக்கிய மன்னன்
2. சித்தார்த்தன்—புத்தர்
3. சுமந்தன்—மந்திரி
4. ஹோரா சாஸ்திரி—சோதிடர்
5. சுப்ரபுத்தன்—யசோதரையின் தந்தை
6. சின்னன்—குதிரைக்காரன்
7. பிம்பிசாரன்—மகத மன்னன்
8. ராகுலன்—புத்தர் புதல்வன்
9. ஏருழு கிழவன், பவனியில் வந்த கிழவன், கனவில் வந்த கிழவன்
10. டாணுக்காரர்
11. அஹமாத்மானந்தர், ஜகன்மித்யானந்தர் } துறவிகள்
12. காயாம்பு
13. ஆட்டிடையன்
14. கோகர்ண சாஸ்திரிகள்
15. குண்டல தீக்ஷிதர்
16. பூசாரி
17. கசாப்புக் கடைக்காரன்
18. ஜீவரக்ஷணப் பிரசாரகர்

19. மாரன்
20. புத்தரின் அறவோர் குழு
21. யசோதரை
22. முத்து, மோகனு, பாகீரதி, கோமதி—தாசிகள்
23. இந்திரகுமாரி, ஜயஸ்ரீ—அழகிகள்
24. மோகி, காமினி, காஞ்சனு—மாயப்பேய்கள்
25. புத்த பிக்ஷுக்கள் முதலியோர்



எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவன்

எல்லா வுடலு மிறைவன் ஆலயமே

# புத்தர் கருணை

## 1. சித்தார்த்தன் இரக்கம்

[80 வயது கிழவன்; ஏழை; இருமலால் வருந்துகிறான்; ஒரு தொத்தல் மாட்டை ஓட்டி வயலுழுகிறான்.]

கிழவன் :—இஹ், இஹ், இஹ்! ஏழைக்கிரங்குஹ் ஹ்வாரில்லையே! ஹ் ஹ்! மரக்கால் நெல்லுக்கு மாடா யுழைக்கிறோம்! கூட ஒரு உழக்குஹ்ஹ் கேட்டாஹ்ல் உறுமுவான் ஆண்டை! உடம்பு தஹ்ள்ளல்லே! ஒரு நாள் படுஹ்தால் கூலியிலே மண் விழும். பெரியகுடும் பம்; பிழைஹ்கவேணும். உம், நமது விதி.......க் கெ, க்கெ, போ, துடியா, மூக்கப்பா, (மாட்டை விரட்டு கிறான். அது சண்டித்தனம் செய்து படுக்கிறது.) ஆ! உனஹ்கும் என்னைப்போல வயதாஹ்சு! உன் தலை யெழுத்தும் என் தலையெழுத்தும் ஒன்றுஹ்ஹ்தான்! உனக்குக் குடும்பஹ்ஹவலை யில்லை. நான் பத்துப்பேருக் குச் சோஹ்று போடணும்.......போ, மூக்கப்பா. (தீனி யில்லை மூக்கப்பன் படுக்கிறான்......) ஆ! நிஹ்க முடிய வில்லை. இன்றைஹ்வேலை நடக்காது போலிருக்கிறதே! ஐயோ! ஏழைக்கிரங்குஹ்ஹ்ஹ்வா ரில்லையேஹ்ஹ்ஹ்...!

[கிழவன், மாட்டின் பக்கத்தில் தலையில் கை வைத்துக்கொண்டு உட்காருகிறான்.]

[வருதல் சித்தார்த்தன், சுத்தோதனன்]

சுத்தோதனன் :—எனதருமைச் செல்வனே, இயற் கையின் அழகைப் பார். எங்கும் இன்பம்! இளவே

னிற் காலம்! பொன்னும், பச்சையும் குலுங்குகின்றன. பூக்கள் எங்கும் புன்னகை புரிகின்றன. உழவர் பாடுகின்றனர். இளந்தென்றலில் இடையர் குழலோசை மிதந்து வருகிறது. மலையருவி 'ஓம்' என்று உலகன்னையின் மடி மீது தாவித் தவழ்கின்றது. கற்றறிந் தடங்கியோர் உள்ளம் போலத் தெளிந்த வாவிகளைப் பார். அதில் பெரியார் அருள்மொழி போலத் தாமரைகள் பூத்தொளிர்கின்றன. அவற்றிடையே பரம ஹம்ஸ ஞானிகள் போன்று அன்னங்கள் உலாவுகின்றன. பசிய வயல்கள் எவ்வளவு ஆர்வத்துடன் செங்கதிரைப் புல்லுகின்றன பார். இந்த வண்ணாத்திப் பூச்சிகளுக்கு இயற்கையன்னை எவ்வளவு அழகிய நிறங்களைப் பூசியிருக்கிறாள்! சோலைப் புட்கள், கனியுண்டு பாடிக் களிப்பதைக் கேள். இறகைக் கொண்டு பறக்கும் இன்பமாகவே அவை காண்கின்றன. புறாக்களும், குயில்களும், கிளிகளும், மயில்களும், சிச்சிலிகளும் இப்பொழிலில் விளையாடுவதைப் பார். அதோ நீலவானை வட்டமிட்டளக்கும் கருடனைப் பார். சிற்றூர்களினின்று திருமணப் பாட்டும், மேளதாளங்களும், 'உலகம் இன்பம், இன்பம்' என்று முழங்குவதைக் கேள்.

சித்தார்த்தன் :—கேட்டேன் ; தந்தையே, கேட்டேன், பார்த்தேன், பார்த்தேன். ரோஜாவில் மறைந்துள்ள முள் என் மனத்தை உறுத்தியது. பசப்பின் உளத்தில் கசப்பைக் கண்டேன். பகலை வேட்டையாடும் இரவைக் கண்டேன். நீலவானில் எத்தனைக் கரு மேகங்கள்! உலகில் ஒன்றையொன்று உண்பதைக் கண்டேன். சிறியதைப் பெரியது சிதைப்பதைக் கண்டேன். புழுமுதல் புமான் மட்டும் ஒன்றை

யொன்று வேட்டையாடி யுண்ணும் துன்பக்காடே உலகம். வாழ்வு, காலத்தின் கொலைக்களம். அதன் உதடு சிரிக்கிறது ; உள்ளம் எரிகிறது. ஆ ! இஃதென்ன !

[கிழவனைக் காணல்]

கிழ:—இஹ்! இஹ்! இஹ்! ஆத்தா! இடுப்புப் பிடிச்சுக்கிட்டதே! ஐயோ! ஹ்ஹ்ஹ் செத்துப்போஹனேன்.

சித் :—தந்தையே, தந்தையே, உமது உலகின்பம் மூலாம் பூசிய துன்பமென்பதை இதோ பாருங்கள் நேரே. ஐயோ ! என் மனம் இரக்கத்தால் வெடிக்கின்றதே ! இந்த ஏழை ஏன் இப்படி வருந்த வேண்டும் ! இந்த மூப்பு இவனுக்கு எப்படி வந்தது ? பெரியவரே உமக்குற்றதென்ன ?

கிழ :—இஹ் ! இஹ் ! இஹ் ! ஆத்தா ! இடுப்புப் போச்சுது ! இஹ் ஹ்ஹ் ஹம் !

சித்:—ஆம், இதுதான் இஹம். அப்பனே, எழுந்திரு.

[தூக்கி எழுப்புகிறான்]

கிழ:—ஆ ! மகராசா வா........!

சித்:—தாங்கள் இப்படி வருந்துவதேன் ?

கிழ:—வயதாச்ஹ்ஹ்சு....மகராசா....பிள்ளை குட்டிகள் சாப்பிடவேணும்....பெரிய குடும்பம் ; உழைத்தாலே பிழைக்கலாம்.

சித் :—ஆ ! கண்ணீர் ! கண்ணீர் ! ஏழை, தள்ளாத வயது, வாழ்வின் துயர்கள் அவனை மண்ணில் வீழ்த்துகின்றன. இப்பரிதாபத்தைக் கண்டபின் நான் அருந்தும் விருந்து துன்பக்கூழாகும். என் மலர்ப்படுக்கை முட்படுக்கையாகும். என் அணிமணிகள், ஏழைகளின் புண்களாகும். இந்த ஏழைகள் படுந்துயரம் என் மனத்

தைக் கலக்குகிறதே! பெரியவரே, உமது துயர் தீர்க்க வேறு வழி யறியாத ஏழை, இப்பொன் மாலையைத் தரு கிறேன். இதைக்கொண்டு சில காலமாவது வயிருர உண்ணும். இனி நீர் ஏர் உழ வேண்டாம்.

கிழ:—என் தங்ஹஹக ராஜா, நல்லாஹஹ இருக்க வேணும்! இஹ, இஹ, இஹம்ம்!

[வணங்கிச் செல்கிருன்]

சித் :—ஆ! என் மனம் வெறுக்கிறது. ஏழை காள், உங்கள் நலிவைத் தீர்க்க என் மனந்துடிக் கிறது. உயிர்காள், என்னுயிர்காள், உங்கள் இன்னல் என்னின்பத்தை விழுங்கி விட்டதே! என்னே வாழ்வு! கொலையும், களவும், குறையும், பிணியும், நிலையா வாழ்வில் நிறைந்தன. உழைப்பது வறிஞர்; கொழுப் பது செல்வர்! எவ்வுயிர்த் துன்பமும் என்னுயிர்த் துன் பம். எவ்வுயிர் மயக்கமும் என்னுயிர் மயக்கம்!...........

சுத்தோ :—கெட்டது காரியம். ஏது நமது இளவர சன் இவ்வயதில் இப்படி இரக்கம் பற்றி உலகின்பத்தை வெறுத்து மயங்குகிருன்! உலக மாயையில் இவனைப் பிணிக்க வேண்டும். சித்தார்த்தா, என்ன சிந்திக்கிருய்? அன்புச் செல்வனே, கல்வி, கேள்விகளில் முதிர்ந்த நீ, எனது நாட்டையாள வேண்டும். சுக போகங்களை யனு பவிக்கவேண்டும். இருக்குமட்டும் சுகிப்பதே இன்பம். நீ சிறு பிள்ளை. வேதாந்தம் பேசாதே...........

சித் :—தந்தையே, என் மனம் விழித்தது. நமது இந்திரபோகத்தைச் சுற்றி ஏழைகளின் கண்ணருவி யோடுகிறது. நமது சுகபோகங்களின் அணிமணிகள் உலகின் துன்ப இருளில் இங்குமங்கும் தாவும் மின் மினிகள் போன்றன.

சுத் :—என் செல்வனே, உலகம் புதனுக்கும், செவ்வாய்க்கும் இடையே சுழல்கிறது. அதில் இன்பமும் துன்பமும் கலந்தேயிருக்கும். நீ இன்பத்தையே பார். துன்பத்தை மற; இளமையின்பத்தை அனுபவி.

சித் :—ஆ! என் இளமையின் பின்னே முதுமை நிற்கிறதே! தை மாதப் பொலிவை ஆடிக்காற்று உதிர்க்கிறது. பகலை இரவு கௌவுகிறது.

சுத் :—சித்தார்த்தா, காலத்திற்கேற்றபடி காற்று, வெய்யில், பனி, மழை எல்லாந்தான் வரும். இலைகள் உதிர்காலத்தில் உதிரும்; துளிர் காலத்தில் துளிர்க்கும். உதிர்ந்த பூவைப் பாராதே; மலர்ந்த பூவைப் பார். துன்பப்பேச்சு வேண்டாம்; இன்பம், இன்பம் என்று சொல்.

சித் :—ஆ! இன்பம்! இன்பமெங்கே........?

சுத் :—வா, உன்னை வாழ்வின்பச் சிகரத்தில் ஏற்றுகிறேன்.

[போதல்]

---

## 2. சுத்தோதனன் சூழ்ச்சி

[சுத்தோதனன் தனது ஞான மைந்தனை உலக மாயையிற் சிக்கவைக்கச் சூழ்ச்சி செய்கிறான். அரசவை; மந்திரி சுமந்தன், சோதிடர் ஹோரா சாஸ்திரி முதலியோர் கூடியுள்ளனர்.]

சுத் :—அருமை மைந்தன், வீரவாலிபன், இளவரசன், வாழ்வின் இளவேனிற் காலத்தில், இலையுதிர் காலம்போலத் துறவை நாடுகிறானே! என்னருமை மாயா, அழகும், திருவும் நிறைந்த அன்னம், இவனைப் பெற்ற ஏழா நாளே துசிதமடைந்தாள். நமக்கொரு

குலவிளக் குள்ளதென மகிழ்ந்தேன். இவன் மனப் போக்கு என் மனத்தைக் கலக்குகிறதே! சுமந்தரே, இளவரசனது மனமாற்றத்தை யறிந்தீரா?

சுமந்தர் :—மஹாராஜ், அறிந்தேன். நமது இளவரசன் மண்ணையும் ஆளுவான்; மாந்தர் மனத்தையும் ஆளுவான். இப்போது அவன் மனத்தை உலகின் பால் திருப்பினால் உலகை ஆளுவான்.

சுத் :—ஆம், ஆம். அதுவே யோசனை. இந்த வேதாந்தப் பித்தை முதிரவிடக்கூடாது. ஹோரா சாஸ்திரிகளே, அவனுடைய ஜாதக பலனைத் தாங்கள்தானே குறித்தீர்கள்? அதை மறு முறை விவரமாகச் சொல்லுங்கள்.

ஹோரா :—ஆயுஷ்மான், சித்தார்த்தன் ஓர் அவதார அம்ஸம். போதி ஸத்வன் சக்தியன்பே அறுகதிர் மீன்வடிவாக மாயாதேவி வயிற்றிற் புகுந்தது. குழந்தை புன்சிரிப்புடன் எவ்விதமான நோயுமின்றி, முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்திப் பிறந்தது. அன்று உலகமெல்லாம் அமைதியின்பஞ் சிலிர்த்தது. இக்குழந்தையைக் கண்ட அசித முனிவர் புகன்ற ஆசிமொழியைத் தாங்கள் அறிவீர்கள்.

சுத் :—ஆம்; "இது பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை அரிதாய் மலரும் அருட் சோதி மலர்; அறிவு மணமும், அன்புத் தேனும் நிரம்பிய அற்புதக் கற்பக மலர்" என்று ஆசீர்வதித்து வணங்கினார் முனிவர். ஆனால், இவன் இப்படி வரட்டுத் துறவில் விருப்பங் கொள்வானெனச் சொல்லவில்லையே! ஆசாரியர் விஸ்வாமித்திரரும் அப்படிச் சொல்லவில்லையே!

ஹோரா :—மஹாராஜ், நமது இளஞ்சிங்கம், ஆசாரியர் விஸ்வாமித்திரர் சொல்லுமுன் அனைத்தையுங் கற்றான். அவனிடம் பொலியும் வனப்பையும், அருளையும் நோக்கினால், அவன் போதி ஸத்வாம்ஸ மென்றே தோன்றுகிறது.

சுமந்தன் :—சித்தார்த்தன் கருணைக்கடல்; முன்பு தேவதத்தன் சுட்ட அன்னத்தினிடம் பரிவுகாட்டி, அதன் புண்ணாற்றி, உயிரைக் காப்பாற்றி, அது சுயேச்சையாகப் பறந்து செல்ல விடுத்தான்.

சுத் :—அதெல்லாம் சரி. அவன் கருணை எனக்குப் பெரிதல்ல; அறிவும் வியப்பல்ல; என்னரசையும், எனது சாக்கிய மரபையும் அவன் வாழவைக்கவேண்டும்.

ஹோரா :—ஆஹா அ! ஆக்ஷேபணையில்லை. ஆண் மூலம் அரசாளும்; சுக்கிரனும், வியாழனும், புதனும் உச்சம்; லக்கினத்திலே குரு இருக்கிறான். இவன் உலகெல்லாம் வணங்கத்தக்கவனாவான்; பெரிய சக்கிரவர்த்தியாவான்; தடையேயில்லை.

சுத் :—அதுவே நமது விருப்பம். மந்திரி, இச்சிறுவன் வைராக்கியத்தை முளையிலேயே கிள்ள வேண்டும். என்ன யோசனை?

சுமந்தன் :—மஹாராஜ், அது மிக மிக எளிது. காதற் கடிவாளம் பூட்டினால், வைராக்கியக் குதிரை அடங்கி நடக்கும். காதலின் இளந்தளிர்க்கரங்கள் இவனது உலக வெறுப்பை ஒரு நொடியில் பற்றி யழிக்கும். காதலின் மெல்லிய அதரங்கள் இவன் கன்னங்களில் உலகின்பத்தை மலரவைக்கும். காதலின் மலர் விழிகள், இவன் விழி வண்டைத் தனது குளிர்நகைத்

தேனில் மயங்கச் செய்யும். எவ்வளவு பெரிய வைராக்கியமும் ஒரு மெல்லியலாள் கிண்கிணிச் சேவடிக்குப் பின்னே ஊசிவாய்ப்பட்ட நூல்போலத் தொடரும். திருமணத்தால் இவன் மனந் திரும்பும்.

சுத் :—அது நலமே. ஆனால், நமக்குப் பிடித்த பெண், அவனுக்குப் பிடியாதிருக்கலாம். காதலைக் காதலே யறியும். தனக்கேற்ற யுவதியை அவனே தேர்ந்தெடுக்க வழி செய்யவேண்டும்.

சுமந்தன் :—அது வுண்மை. காதல் மணமே கருத்திற்கினிதாம். ஆம், நமது இளவரசன் பிறந்த நாள் இந்தப் பௌர்ணமி. அன்று ஒரு வசந்தோற்சவம் நடத்தி, இந்நகரின் அழகிளஞ் செல்விகளுக்குச் சிறந்த விருந்தும், பரிசும் அளிப்போம். மற்ற மன்னர் புதல்விகளும் அந்நாள் வருக. அனைவர்க்கும் பொன்னும், அணியும், நமது வீரத் திருவழகனே யுதவுக. அப்போது இவன் கருத்து எக் கன்னியிடம் சிக்குகிறதெனக் குறிப்பாம்.

சுத் :—அவ்வாறே செய்வோம். நகரெங்கும் விளம்பரம் செய்க. 'இளவரசன் நகரச் செல்விகட்கு உல்லாச விருந்தளித்துத் தன் கையினால் அழகிற்கேற்ற பரிசுந் தருவான்' என விளம்பரஞ் செய்க. சாஸ்திரிகளே, சித்தார்த்தனுக்கேற்றபடி வசந்தோற்சவத்திற்குப் பௌர்ணமியன்று நல்ல லக்கினம் பார்த்துச் சொல்லும்.

ஹோரா :—ஆஹா, சித்திரா பௌர்ணமி, புதன் கிழமை, மேஷம், விருஷபம், மிதுனம், கன்னி, பேஷ்! கன்னிகாலக்னம்; மூலம், பூராடம், உத்திராடம், ரேவதி, பேஷ்! அஷ்டமசுத்தி; மஹாராஜ், மாலை, சரியாக நான்கு

மணிக்கு, வஸந்த மண்டபத்திற்கு அரச குமாரன் வரலாம். சந்திரன் புதனைப் பார்க்கிறான். அவசியம் கல்யாணமாகும். ஆக்ஷேபணையில்லை. ஒரு கன்னிகா ரத்தினம் புதையல்போலக் கிடைப்பாள். சந்தானத்திற்கும் இடமிருக்கிறது. நல்ல நாள். பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.

சுத் :—சந்தோஷம்; அப்படியேயாகட்டும் மந்திரீ, முதன்மையாகச் சுப்ரபுத்தனையும் அவன் பெண்ணையும் அழைக்கவேண்டும். அப்பெண்ணை அன்று கண்டது முதல், நமது சித்தார்த்தனுக்கே அவளை மணமுடிக்க என் மனம் விரும்புகிறது.

சுமந்தன் :—நல்ல இடந்தான். ஆனால், அப்பெண்ணைத் தேவதத்தன், அர்ஜுனன், நந்தன் முதலிய இளவரசர்களும் காதலிக்கின்றனர். சுப்ரபுத்தன் சிறந்த வீரன். ஆதலால், ஒரு பெரிய வீரனுக்கே தன் பெண்ணைத் தரப்போவதாகவும், சீக்கிரம் ஒரு வீரப் போட்டி ஏற்பாடு செய்யப்போவதாகவுந் தெரிகிறது. நமது சித்தார்த்தன் வீரத்தில் குறைந்தவனா? அம்பும், வாளும், தேரும், புரவியும், யானையும், சேனையும்,அவன் சொன்னபடியாடும். அதனாலன்றோ, 'அவன் உலகை வென்று சக்கிரவர்த்தி யாவான்' என்று சோதிடம் கூறுகிறது.

சுத் :—வீர விளையாட்டுக்களில் சித்தார்த்தனது மனப்போக்கைத் திருப்பும். எப்படியும் அவன் காதற் கருத்து வெளிப்படட்டும். பிறகு அதை முடிக்க மருந்து தேடுவோம். மந்திரீ, வசந்தோற்சவத்திற்கு நமது மாளிகையை இந்திர சபைபோல அலங்கரிக்கவேண்டும். பெண்மணிகளுக்கு முத்துமாலையும், பதக்கமும் பட்டும் தரலாம். சாஸ்திரிகளே, சித்தார்த்தனுடன்

இது விஷயமாகப் பேசி அவன் மனத்தைத் திருப்புங்கள்.

ஹோரா :—அப்படியே. இந்தப் புக்தியில் அவஸ்யம் விவாகமாகும். எனது சோதிடம் தவருது.

சுத் :—கருதியது கைகூடுக !

எல்லாரும் :—ததாஸ்து.

[காட்சி முடிவு]

---

## 3. காதலர் கண்கள்

[வசந்த மண்டபம், பூக்களாலும், சித்திரங்களாலும் அலங்கரிக்கப் பெற்றுள்ளது. யாழும், குழலும், மத்தளமும் இசை முழங்குகின்றன. சித்தார்த்தன் ஒரு பொன்னணையில் வீற்றிருந்து, பெண்களுக்குப் பரிசளிக்கிருன். சுத்தோதனனும் மந்திரியும் அவனைக் கவனித்துக்கொண் டிருக்கின்றனர். இந்திர குமாரி, ஜயஸ்ரீ முதலியோருக்குப் பின் இறுதியாக யசோதரை வருதல்.]

சுத்தோ :—காதல் ! கண் பார்த்தாலன்ருே காதல்! மனம் பொருந்திஞலன்ருே மையல்! மந்திரீ, இதுகாறும் எத்தனை இளமங்கையர் பரிசு பெற்றனர் ?

சுமந்தன் :—சுமார் ஆயிரம் ; நமது கபில வஸ்துவின் சிறந்த காரிகைமார் அனைவரும் அநேகமாக வந்து சென்றனர். அனைவர்க்கும் கம்பீரமான நடுநிலையினின்று, சித்தார்த்தன், முத்து மாலையும், பட்டணியு மளித்தான்.

சுத்தோ :—பாவையர் மலர் தரும் போதாயினும் அவன் விழி, அழகைக் கூர்ந்து பார்க்கவில்லையா ?

சுமந் :—அழகை அவன் மலர்போலப் பார்க்கிறான்; அதிற் சிக்கவில்லை. மங்கையர் விரும்பித் தரும் நாண் மலர்கள் அவன் புன்னகைமுன் நாணுகின்றன.

[இந்திரகுமாரி சுத்தோதனன்பால் வருகிறாள்]

சுத் :—இதோ செல்லும் கட்டழகி யார்?

சுமந் :—இவளே இந்திரகுமாரி; நமது கபிலவஸ்துவின் அழகு மணி. இவளது அழகுக் காந்தமேனும் அவன் கருத்தை யிழுக்குமா காண்போம்.

சுத் :—மந்திரீ, அதோ பார்; அவன் விழிகள் சற்று உறுத்து நோக்கின அல்லவா?

சுமந் :—ஊஹூ—! தங்கள் ஆசையே அக்கனவு கண்டது. அம்மலர் விழிகள் வெளியே முகையவிழ்ந்து உள்ளே நோக்குகின்றன.

[இந்திர குமாரி பரிசு பெற்றுச் செல்லல்]

சுத் :—இந்திர குமாரியும் சென்றாள். இதோ வருவது யார்?

சுமந் :—இவள் ஜயஸ்ரீ. அவளுடைய அன்ன நடையும், முத்திள நகையும், மான் விழிகளும், காதலர் விருந்தன்றோ!

சுத் :—அது உலகிற்குச் சரி. நான் செய்த தீவினை அவ்வளவுதான். ஒரு மகன், செல்வத் திருமகன், எனக்குப் பின்னே வரு மகன், இப்படி உலகை விரும்பா வெறு மகனானானே! பெற்றும் பெறாதவனானேன்! ஜயஸ்ரீ அதோ அவனைப் புன்னகையால் வசீகரமாக நோக்குகிறாள்.

சுமந் :—அவன் அன்னியம் நோக்காது தன்னையே நோக்கும் பிரம ஞானிபோலன்றோ வீற்றிருக்கிறான்! [ஜயஸ்ரீ இன்ப மலரீதல்]

சுத் :—அதற்கும் ஒரு விகாரமற்ற புன்னகையையே யீந்தான். அப்பா, இவன் மனம் கல் மனம். ஜயஸ்ரீ, ஜயஸ்ரீ, நீயும் எனது இளைஞனைக் கவர்ந்திலை—இனி!

சுமந் :—அவ்வளவு தான்; இத்துடன் பரிசு முடிந்தது; மங்களம் பாடவேண்டியதுதான்.

சுத்:—அந்தோ! முயற்சி வீணாயிற்று. இத்தனை அழகின்பம் எதிர் நின்றும், அவன் சித்தம் கலங்கவில்லையே! என்ன வைராக்கியம்!

சுமந் :—காதற் காந்தங் கவராத வைரவுறுதி இவனுக்கேயுள்ளது. யான் ஏமாந்தேன். பரிசும் முடிந்தது. [வருதல் யசோதரை]

சுத்:—ஆ! இதோ வருகின்றாளே!

சுமந் :—சுப்ரபுத்தன் ஈன்ற அழகரசி—எல்லாம் முடிந்த பின் வருகின்றாள்.

சுத்:—மயிலும், அரச அன்னமும் நாணும் நடை குலுங்கும் யசோதரையின் திருமுகத்தில், ஏதோவொரு புதிய இன்ப வுறுதி தவழ்கின்றது. சித்தார்த்தா, சித்தார்த்தா, உன் விழிமலர் அவள் புன்னகையிற் பொருந்தியது. ஜயம்! சுபம்!

சுமந் :—இனிக் காதல் பழுக்கும், பழுக்கும்.

[யசோதரை சித்தார்த்தனுக்கு அன்பு மலர் தந்து, நாணும் புன்னகை முகத்தால் நோக்குகிறாள்]

யசோதரை:—ஈகை யுளதோ?

சித்தார்:—[புன்னகைத்து, முகநோக்கி] உளது, உளது. மற்றைப் பரிசுகள் மாதரார் கொண்டனர்; இதோ

என் மார்பை அணிசெய்யும் மரகத மாலையால் உனது மார்பை யணி செய்கின்றேன்.

[தனது மாலையை யெடுத்து யசோதரைக்குச் சூட்டுகிறான். யசோதரை நாணித் தலைகுனிந்து நின்று செல்கிறாள்]

சுமந் :—வென்றேன் ; வென்றேன்; மன்னவோ, அந்த மான் விழி, அவன் மலர் விழியைக் கவர்ந்தனள். முன்னாலே காலும் பின்னாலே கண்ணுமாக யசோதரை செல்லுகிறாள். அவளையே இவன் கண்கள் பின்பற்று கின்றன.

சுத் :—ஆம்,வென்றேன்; வென்றேன்; யசோதரை நீடு வாழ்க! காதலே, நீ கற்பகாலம் வாழ்க! உன் பாசத் தில் எனது இளஞ் செல்வனை உறுதியாய்ப் பிணைப்பா யாக !

சுமந் :—மன்னரே, தங்கள் கருத்து நிறைவேறி யது. இனி யென்ன ?

சுத்:—மந்திரீ, வஸந்தோற்சவம் முடிந்தது. இனிச் சுப்ரபுத்தனிடம் நமது ஹோராசாரியார் தூது சென்று பெண் கேட்கவேண்டும்.

சுமந் :—சந்தோஷம். அங்ஙனமே தூதனுப்பி, இதோ செய்தி தெரிவிக்கிறேன்.

[செல்லல்]

சுத்:—[சித்தார்த்தனைத் தழுவிக்கொண்டு]எனதன்புச் செல்வனே, என் மனத்தில் பாலுந் தேனும் வார்த் தாய். யசோதரையிடம் உனதுள்ளம் சென்றது. என் காரியம் வென்றது.

சித் :—தந்தையே, “ பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ ?” முற்பவங்களில் ஒருகால் யான் ஒரு வேட்டுவன் மகனாயிருந்தேன் ; ஒரு காட்டில் சிறு

பெண்களுடன் இதே பொழுதில் மரங்களைச் சுற்றி விளையாடும்போது, அப்பெண்களுக்கு மலர்களைச் சூட்டினேன். இறுதியாக ஓர் அழகி வந்தாள். அவளுக்கு ஓர் இளமானும், எனது உள்ளக் காதலும் ஈந்தேன். அவளே யசோதரை ; அவனே யான். இருவரும் நெடுநாள் சேர்ந்து வாழ்ந்து இறந்தோம். இன்ப துன்பச் சக்கிரங்கள் பூட்டிப் பிறப்பிறப்பெனும் சாலைவழியே உருளும் வாழ்வுத் தேரில் இருவரும் இங்குற்றேம். ஒருவரையொருவர் பழைய காதல் விழியால் அறிந்தோம் ; கண்கருத்தொன்றினேம் ; இதில் வியப்பில்லை.

சுத் :—என் செல்வனே, இப்போதாயினும், உன் மனம் உலகின்பால் திரும்பியதே. என் அரியணை மீது அத்திருவுடன் வீற்றிருந்து, நீதி செலுத்திப் புகழ் பெற்றோங்குவாயாக ! என் செல்வக்கனியே, அமுதச் சுவையே.

[மைந்தனைத் தழுவுதல்]

[மந்திரி வருதல்]

சுமந் :—மஹாராஜ், சுப்ரபுத்தரிடமிருந்து செய்தி கிடைத்தது.

சுத் :—சுபம் ! சுபம் ! என்ன ?

சுமந் :—ஹோரா சாஸ்திரியார் முன்பே பொருத்தம் பார்த்து மாப்பிள்ளையின் பெருமையை வியந்து கூறினர்.

சுத்:—கேட்க வேண்டுமா ? சாஸ்திரிகள் ஒரு சித்தார்த்த புராணமே வாசித்திருப்பார். முடிவென்ன ?

சுமந் :—சித்தார்த்தன் ஏதோ வழவழ வேதாந்தி யென்று அவர் கருதுகிருர் போலும்—

சுத் :—நடந்ததென்ன ?

சுமந் :—தன் மகள் கரத்திற்குப் பல மன்னர் போட்டி போடுவதாகவும், வில், வாள், குதிரையேற்றங்களில் வென்ற வீரனுக்கே அவளைத் தரப்போவதாகவும் சொன்னாராம். தேவதத்தன் சுட்ட அன்னத்திற்கும் அவ்வளவு இரக்கங்காட்டிய சாந்தன், வீரப்போட்டியில் தலை தூக்கமாட்டானென்று அவர் நம்புகிறார்.

சித் :—ஆ ! அப்படியா ? தந்தையே, சிந்தனைவேண்டாம். சித்தார்த்தன் வீரத்திலும் இணையில்லாதவன் என்று காட்டுகிறேன். இந்த நரம்புகளில் ஓடும் தங்கள் வீர ரத்தத்தின் செழுமையை அந்தச் சுப்ரபுத்தன் அறியட்டும். சித்தார்த்தன் அறைகூவி யழைக்கிறான். துணிவுள்ள வீரர் வருக ; ஆண்மையை விளக்குக. வில், வாள், தேர், பரி, எதிலும் எதிர்வந்து பொருதுக. வெல்வோன் வெற்றித் திருவாகிய யசோதரையை அடைக. இன்றைக்கு ஏழாவது நாள் போட்டி நாள் ; பார்க்கிறேன் ஒரு கை.

சுத் :—இப்போது புத்தியுடன் பேசுகிறாய்; மைந்த, என் மனம் மதி கண்ட கடலெனப் பொங்குகிறது. உன் காதலைக் கண்டேன். உன் வீரத்தையும் காண்கிறேன். பிறகு உன் திருமணத்தையும், இல்வாழ்வையும், பட்டாபிஷேகத்தையும் உன் அரசாட்சியையும் கண்டு மகிழ்வேன். என் குலவிளக்கே, நீ திருவோங்கி வாழ்க ! இதோ பறையறைவிக்கிறேன். மந்திரீ, வீரப் போட்டிக்கு அர்ஜுனன், நந்தன், தேவதத்தன் முதலிய சூரப்புலிகளுக்கு அழைப்பு விடுக. சுப்ரபுத்தன் என் செல்வனது வீரத்திறனைக் கண்டு வியக்கட்டும்.

சுமந் :—அப்படியே. இனி, விளையாட்டு மேடையை அமைப்போம். [எல்லாரும் செல்லல்]

---

# 4. வீரப் போட்டி

[பந்தய மேடை ; ஸுப்ரபுத்தன், சுத்தோதனன், மந்திரி முதலியோர் மேடைமீது வீற்றிருக்கின்றனர். யசோதரை அலங்காரமாக ஓர் அரியணையில் வீற்றிருக்கிருள். அர்ஜுனன், தேவதத்தன், நந்தன் ஆகிய மூவரும் சித்தார்த்தனுடன் போட்டி போடுகின்றனர்.]

சுப்ர :—சுத்தோதனரே, தங்கள் மைந்தன் கேவலம் வழவழ வேதாந்தி யென்றிருந்தேன். குட்டி வேதாந்தி, சிம்மக் குட்டிபோலப் பாய்கின்ருன். தங்கள் மகனன்ரே !

சுத்தோ :—சுப்ரபுத்த, சித்தார்த்தன் மனப்போக்கு எனக்கே பிடியாதிருந்தது. இன்று அவனது ஞானத்துட் கனலும் வீரம் விளங்கியது. அவன் மனம் பொன் மனம் ; கை வைரத்தடங்கை ; வில்லிலும் குதிரை யேற்றத்திலும் எல்லாரையும் வென்று தீர்த்தான்.

சுப்ர :—அதோ வாட்போர் தொடங்கியது. தேவதத்தன் வாள் கொடிமின்னல் போலச் சுருண்டு வீசப்படுகின்றதே !

யசோதரை :—(மனத்துள்) எனது காதல் அவரது கண்ணம்பை யுண்டது ; இங்கு வில்லம்பை வென்றது. காதலரே, தாங்கள் வாட்போரில் வென்ருல் பிழைப்பேன் ; இல்லையேல் இந்த வேட் போரில் மாள்வேன். என் காதலன் கரம் வெற்றி பெறுக !

[சித்தார்த்தன் - தேவதத்தன் வாட்போர் புரிதல்]

[திரைக்குப் பின்னால் அடியில் வரும் வாட்பாட்டைப் பாடிக் கொண்டே யிருக்க வேண்டும். அதற்கேற்றபடி வாள் வீச வேண்டும்.

ஆணவ மாயப்பகைக் குலத்தை,
யறிவெனும் வாளாற் பிளந்தெறிவோம் ;
காணு மூலமெல்லாம் வென்றிடுவோம்
காட்சி யுலகினை யாட்சி செய்வாம் !]

ஸுப :—பலே தேவதத்தா ! பலே ! விடாதே ! வாளை வலத்திலே வெட்டி வீசு.

சுத்தோ :—அப்படித் தலைநிமிர்! இடத்திலே வளைத் துச் சுழற்றி வீசு, வீசு, பேஷ், பேஷ் !

ஸுப :—வென்றான் சித்தார்த்தன். அடேயப்பா, வேதாந்தத்திற்கு இவ்வளவு வீரமிருக்கிறதா !

யசோதரை :—என் மனங் குளிர்ந்தது.

ஸுப :—சுத்தோதனரே, தங்கள் வீர மைந்தன் என் செல்வி யசோதரை மணாளனாகுக ! யசோதரா.

[மாலை சூட்டச் சொல்கிறான்]

சுத் :—மங்களம் பொங்குக ! என்னருமை சித் தார்த்தா, எனது நண்பன் ஸுப்ரபுத்தன் செல்வி உனது வாழ்வைத் திருவுறுத்துக ! மங்களம்.

[யசோதரை சித்தார்த்தனுக்கு மாலை சூட்டுகிறாள் ; சித்தார்த் தன் யசோதரைக்கு மாலை சூட்டுகிறான்.]

எல்லாரும் :—

கண் கருத்திணை இன்பக் - காதல் வாழ்கவே !
மண்ணுலக வாழ்வி லமுத - மாரி பொழிகவே !

சித்தார்த்தன் வாழ்க ! யசோதரை வாழ்க! காதல் வெல்க !

[காட்சி முடிவு]

# 5. இன்ப வனம்

[சித்தார்த்தன் மாளிகை; உரோகிணி யாற்றங்கரையில் இன்ப வனம். அதில் மரங்கள் கனி குலுங்குகின்றன. விதவித மான மலர்கள் காண்கின்றன. புட்கள் பாடுகின்றன. அங்கே ஒரு பைங்கொடிப் பந்தலில் முக்தாமணி, மோஹனை என்னும் இரண்டு தேவதாசிகள் சித்தார்த்தன் வரவை எதிர்பார்க்கின்றனர்.]

மோகனை :—முத்து, உன் மதி முகம் என்னைக்கூட மயக்குதடீ! உனது புன்னகை முத்து, உன் வார்த்தையும் முத்து, உன் அழகு முத்து, உன் பெயரும் முத்து.

முத்து :—இந்த முத்து இவர் ஞானப் பித்தை மாற்ற முடியவில்லையே! படிகத்தை உருக்கி வார்த்தாற் போலே ரோகிணி யாறு; அதன் கரையில் இந்திர லோகம்போலே வசந்த மாளிகை; மரகதப் பந்தலில் இரத்தினங்களைப் பதித்ததுபோலே கனிமரங்கள்; எங்கும் பூமணம்; புள்ளிசை, வண்டொலி, பாட்டொலி. யாழொலி கேட்டுக் குயில்கள் மெச்சுகின்றன. நமது நடனத்தைக் கண்டு மயில்கள் ஆடுகின்றன. அழகிய மாதர் பின்னே அன்னங்கள் நடக்கின்றன. எங்கும் கண் விருந்து, செவி விருந்து, நாவிருந்து, பாவிருந்து, பூவிருந்து! இவை இருந்து மென்ன? இந்த ஞானி மனம் திருந்த வில்லையே!

மோகனை :—அடி முத்து, உன் புன்னகைச் சுடரில் விழாத ஆண்விட்டி லுண்டோ? கார்மேகத்தைப் பிளக்கும் கம்பி மின்னல் போன்ற உன் வகிடும், மீன் விழிகளின் இந்திர ஜாலமும், உன் மதிமுகஞ் செய்யும் மாயங்களும் பார்த்தால், எனக்கே என்னமோ செய்கிறதே! உன் வலையில் விழாத வன்மனமுண்டோ?

முத்து :—வலையில் மீன் சிக்கும். இது திமிங்கிலமா யிருக்குதடீ ! உடை, நடை, முறுவல், கண் வலை, எல்லாம் இவரிடம் பலிக்கவில்லை. நான் கண்ணசைத்தால் ஆடவர் கருத்தசையும் என்பர். என் குலுக்கு ஆடவர் சித்தத்தை உலுக்கு மென்பர். இந்த அறிவுச் சுடர் முன்னே நமது தளுக்கு மினுக்கெல்லாம் மின்மினி போலாகும்.

மோகனு :—என்ன வைராக்யம் ! என்ன வைராக்யம் ! ஆனுல், ராணியிடம் பிரியமாகவே யிருக்கிருர்.

முத்து :—அங்கேயும் அப்படித்தான். இராகுலன் பிறந்ததைக் கேட்டதும், ' பந்தத்தின்மேல் பந்தம் வந்ததே ' என்ருர். எப்போதும் உலகிற் காணும் துன்பத்தைக் கண்டு................

மோகனு :—கண்டா ? இங்கே துன்பமென்னும் பேச்சே யில்லாது மஹாராஜா பலமான சுக போகங்களை அமைத்திருக்கிருரே !

முத்து :—இருந்து மென்னடீ,

வாடிய மலரைக் கண்டு வாடுவான்; வாழ்வின் வீழ்வை
வீடிய தழையிற் கண்டு விழியுகுத் திடுவான் ; ' சுற்றும்
சேடியர் மகன் மனைவி திருவென மின்னும் இன்பம்
நாடக வுலகச் சீர் ; போம் நமன்விடுந் திரைக்குள் ' என்பான் !

மோகனு :—இந்த வைராக்கியக் கோட்டையை எப்படியாவது இடிக்கவேண்டும். நமது பரத நாட்டியத்தில் மயங்காத உள்ளமில்லை.

யதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி :
யதோ த்ருஷ்டிஸ் ததோ மன :

யதோ மனஸ் ததோ பாவோ
யதோ பாவோஸ் ததோ ரஸ :

(கைவழி நயனம் செல்க ; கண்வழி மனம் செல்க ; மனத்தின் வழியே பாவனை செல்க; பாவனை வழியே ரஸம் பொலிக)

என்ற பரத சாஸ்திர உண்மைப்படி இன்று நமது லாஸ்ய, தாண்டவ, நாட்டியத் திறமை யெல்லாம் காட்டுவோம் ; பரத நாட்டியத்தில் நீ ரம்பை..........

முத்து :—ஊர்வசி உன்னிடம் கலைப்பிச்சை வாங்க வேண்டும். கைக்குறி, கட்குறிகளெல்லாம் இன்று கணக்கா யிருக்கவேண்டும்.

மோகனா :—அதோ பாகீரதியின் பாட்டும் கோமதியின் முழவும் கேட்கின்றன. இளவரசர் வருகிறார். எழுந்திரு........

[சேடியர் சூழ, யசோதரையுடன் சித்தார்த்தன் வருகிறான் ; வீணையும், மத்தளமும், இனிய குரலும் சூழ, ஏதோ கனவு காண்பவன்போல வந்து, பளிங்கணையில் அமர்கிறான். யசோதரை பக்கத்தில் அமர்கின்றாள். உடனே நடனப்பாட்டுத் தொடங்குகிறது. முத்துவும் மோகனாவும் சித்தார்த்தனை வணங்கி ஆடுகின்றனர்.]

எல்லாரும் :—எமது இளவரசருக்கு இன்பம் பொங்குக !

கோமதி :—(யாழுடன் பாடுகிறாள்)

**ஆரபி ராகம் - ஆதிதாளம்**

**பல்லவி**

புன்னகை பூத்தருள்வாய்—அரசேஎன்
இன்னலைத் தீர்த்தருள்வாய் !

**அனுபல்லவி**

என் மனங் கொள்ளை கொண்ட
கண்ணா, மணிவண்ணா,
உன்னையே கூவுகின்றேன்
பொன்முகங் காட்டியொரு (புன்ன)

**சரணம்**

அன்புடன் அழைத்திட்டால்,
அகமகிழ வாராயோ?
ஆசையாய் வேண்டினால்
அருளினைத் தாராயோ?
'இன்ப மின்ப' மென்றே
இசைக்கவென் னுயிர்ப் பெல்லாம்
இக்கணம் வந்தழகு
சொக்குங் காலைபோ லொரு (புன்ன)

[சித்தார்த்தன் அசையாது தன்னுள்ளே ஆராய்ந்து நிற்கிறான். முடிவில் சித்தார்த்தனுக்கு அனைவரும் அன்று தொடுத்த மாலை சூட்டுகின்றனர்.]

எல்லாரும் :—

இன்பம் இன்பம் இன்பம்—எங்கும் - இன்பம் இன்பம் இன்பம்
அன்பிற் குலவும் அழகா ருலகம் (இன்)

சித்தா :—

துன்பந் துன்பந் துன்பம்—முற்றுந் - துன்பந் துன்பந் துன்பம்
மின்போல் மறையும் மண்ணா சையெலாம் (துன்)

யசோதரை :—நாதா, 'உலகம் அழகு; அழகு இன்பம்' என்று சொல்லுங்கள். துன்பமென்றால் துன்பம்; இன்பமென்றால் இன்பம். சொல்லுக்கேற்ற பயன். முத்து, மோகனா, கங்கா, கோமதி, நீங்களெல்லாம் உடனே மான்கள், மயில்கள், அன்னங்களை யழைத்துக்

கொண்டு ஆனந்த பவனத்திற் சென்றிருங்கள். அங்குச் சற்று உல்லாசமாக மயில்களும் மான்களும் சூழ வுலாவுவோம். நாங்கள் பந்து விளையாடுவோம். அப்போது பாண்டில் முழங்கவேண்டும். பிறகு உப்பரிகைக்குச் செல்வோம். மோகனு, நீ ரஸவதியிடம் சென்று, தேனும் பாலும், கனியும் பருப்பும் சேர்த்து, மிகவும் இனிய பாலப்பம் செய்து உப்பரிகைக்குக் கொண்டுவரச்செய். வெண்ணிலாவின் இன்பமும், தென்றலின் மணமும், இன்னிசையமுதும், இளந்திருவழகும் மன்னன் மனத்தை மகிழ்வுறுத்தும்.

அனைவரும் :—உத்தரவு.

[தாஸிகள் செல்லல்]

புத்தர்:—மாயக் கூத்து முடிந்தது. மனமே இதெல்லாம் உனது உறுதிக்கோட்டையை இடிக்குமா? மாயத் துயரில் மயங்காதே மனமே.

யசோதரை :— இந்த இன்ப மாளிகையில் எனது ஆருயிர் நாதனுக்குத் துன்ப நினைவேன்? அந்தோ! மனம் என்னென்னவோ நினைக்கின்றதே! எனதாருயிரே, சற்று இச்சோலை யழகில் உலாவுவோம். இங்கு மயில்களும் அன்னங்களும் உலாவுகின்றன. கிளி, மைனு, சிச்சிலி, கருடன், தூக்கணங்குருவி, புருக்கள் ஆகிய இவற்றின் மணிக் குரலுடன் குயிலிசை கொஞ்சுவதைக் கேளுங்கள்.

[இச்சமயம் திரைக்குப் பின்னல் பறவைகள்போலக் கூவ வேண்டும்]

சித்:—ஆம், செருக்கற்ற இயலிசை; மனிதர் பாட்டில் போட்டியும் பொறாமையும் கலக்கின்றன. இச்சிறு புட்கள் வஞ்சமற்று ஏதோ வொன்றைப் பாடுகின்றன.

[பஞ்ச வர்ணக் கிளி, "சித்தார்த்தா" என்று கூவுகிறது]

யசோ:—நாதா, அந்தப் பஞ்சவர்ணக்கிளி தங்கள் பெயரைக் கூவுகிறது கேளுங்கள். மோகனு அதை அப்படிப் பழக்கியிருக்கிருள்.

சித்:—ஆம், 'சித்தார்த்தா, விழித்துக்கொள்' என்று கூவுகிறது.

யசோ :—அந்த அக்குப் பட்சியைக் கேளுங்கள். 'அக்கா, அக்கா' என்று கூவுகிறது.

சித்:—இல்லை, 'துக்கா, துக்கா' என்று என் காதில் விழுகிறது.

யசோ :—நாதா, இப்பூக்கள் தங்கள் விழிகளைப் பார்த்து மகிழ்கின்றன.

சித் :—அதோ ! அத்தெள்ளூற்றிற் பூத்த கமலம் நினது மதி முகங் கண்டு உளங் குவிகிறது.

யசோ :—அருமரை குவிந்தால் அல்லி மலர்கிறது.

சித் :—காதலி, மலர்வதும் குவிவதும் உலகியல்பைக் காட்டுகிறதன்ருே. மலர்ந்தது வாடுகின்றது. இதோ பார். சற்று முன்னே புன்னகை குலுங்கிய மலர்காள், இப்போது உங்கள் நிறமெங்கே ? மணமெங்கே ? எல்லாம் மண், மண், மண். என் காதலி, இதோ பார் ! இன்று தோன்றி, நாளை வீழ்ந்து மண்ணுகும் உலகியல்பை. இவ்வாழ்வு மலரும் இப்படித்தானே வீழ்ந்து மண்ணுகும் ?

யசோ :—எனதாருயிரே, சுபத்தையே நினையுங்கள். பூ வுதிர்ந்தாலும், இப்பசுஞ்சோலை மீண்டும் பூத்துக் கனிவதைக் கருதுங்கள்.

சித் :—அதோ பார். அந்த இலை கீழே யுதிர்ந்தது. [ஒரு இலை உதிரல்] இனி இவ்விலை வாடி மண்ணுகும்.

அதுபோல நமது நாட்கள் உதிர்கின்றன. பிள்ளைப் பருவம் கோடை, வாலிபம் இளவேனில், நாற்பதிற்கு மேல் கார் காலம், அறுபதிற்கு மேல் இலை யுதிர்ந்து, வாழ்வு மரம் வரண்டு வீழ்ந்து மண்ணாகும்.

யசோ :—மணாளா, நல்லது நினையுங்கள். உள்ள மட்டும் உண்மை; நுகர்ந்த மட்டும் இன்பம்; அதோ விண்ணில் மேகப்படலங்களைப் பாருங்கள். அவற்றைக் கண்ட இம்மயில்கள் எவ்வளவு உற்சாகமாகத் தோகை விரித்து நடம்புரிகின்றன. மண்ணிலுள்ள இன்பத்தைக் கண்டு இவ்வாறு மகிழுங்கள்.

சித் :—யசோதரா, ஆராய்ந்து பார். களங்கமற்ற நீல வானை இக்கருமேகங்கள் கவர்ந்தன. மனித வாழ்வைத் துயர் மேகங்கள் பற்றுகின்றன.

யசோ :—ஆ! இதிலும் தங்கள் துயரக் கொள்கை புகுந்ததா? இந்தத் தெள்ளோடையில் அன்னங்கள் செல்வதைப் பாருங்கள்; அவை அழகாகச் செந்தாமரையில் ஒதுங்குகின்றன. அதோ அந்த அரச அன்னம் தனது பேடையுடன் அந்தச் சாம்பநதத்தில் வீற்றிருக்கும் பொலிவைப் பாருங்கள். அவை நம்மைப்போலிருக்கின்றன.

சித் :—ஆம், என் கண்ணே, ஆனால் அவை வைகும் பூ வாடிப்போம். பிறகு, ஆ! அதனினும் ஒரு பெரிய காட்சி—பாராய் யசோதரையே; இந்த ரோகிணியாற்றில் விண்மேகங்களின் நிழல் படிந்துள்ளது. இது போலவே தெளிந்த வுள்ளத்தில் ஆசை படிகிறது.

யசோ :—அங்குமா? நாதா, எதைக் கொண்டுதான் தங்களை மகிழ்விப்பது? பூந்தூளையும், நறுமணத்தையும்

அள்ளிவரும் தென்றல், இன்பம் இன்பமென்று பாடுகிறது, கேளுங்கள்.

சித் :—ஆ! காற்றே, காற்றே, எங்கே ஓயாதலைகிறாய்? சிறிது அமைதி ; பிறகு ஒரு வீச்சு, ஒரு சுழல், சூறை, புயல், பெரும் புயல் ; இதுதான் உன் வாழ்வின் சரிதை. காற்றே, என் காதில் ஏதோ இரகசியம் பேசுகின்றாய். நீ எங்கிருந்து வருகிறாய்? எங்குச் செல்கிறாய்? ஆற்றோட்டமும், காற்றோட்டமும், புயலோட்டமும், வாழ்வோட்டத்தையே குறிக்கின்றன. யார் இவற்றை அளவின்றிக் கொட்டிக்கொண்டே யிருப்பது? ஆ! காற்றே, "எழு, விழி, துற, அறி, ஒளிர்" என்று என் காதில் ஒரு மந்திரம் சொல்லுகின்றாய் ; பொருளுணர்ந்தேன். என் காதற் கற்பகமே, பார்த்தாயா சுற்றிலும்? எல்லாம் போக்கு வரவு செய்கின்றன. அதோ மேற்கே ஞாயிறு, 'போய் வருகிறேன்' என்கிறது. இதோ கிழக்கே முழுமதி 'வந்தேன், வானிற் பவனிசெய்து செல்வேன்' என்கிறது ; அதோ தெரியும் மிதுனராசி, இதோ சப்தரிஷி மண்டலம், அதோ தெரியும் விருச்சிகராசி, இவை யெல்லாம் உயர்ந்து, தாழ்ந்து, வளைந்து, 'வந்தோம் செல்வோம்' என்கின்றன. பகலும், இரவும் அப்படியே. இந்த நதியும், 'பனி மலையினின்று வந்தேன் ; கடலை நோக்கிச் செல்கின்றேன்' என்கிறது. நமது வாழ்வும் அப்படித்தானே—'பிறந்தேன், வளர்ந்தேன், திரிந்தேன், நுகர்ந்தேன், முதிர்ந்தேன், தளர்ந்தேன்...........இறந்தேன்' என்று செல்கிறது!

யசோ :—எனது ஆருயிரே, சுற்றிலுமுள்ள எல்லாம் இப்படித் தோன்றும்போது யானுந் தங்களுக்கு....

சித் :—இல்லை ; கண்மணி, நீயும் யானும் ஒன்று. நமக்குத் தொடர்பு முற்பிறப்பிலேயே உண்டாயிற்று.

யசோ :—அதனாலேதான் தங்களைக் கண்டதும் மனம் காதலுண்டது.

சித் :—பிரிந்தவர் கூடினால் பேசவேண்டுமோ ? ஆனால் கூடிப் பிரிவதும், பிரிந்து கூடலும் உலகியல்பு.

யசோ :—நாதா, இங்கு எல்லாம் இன்பமாகத் தானே யிருக்கிறது. தங்கள் மனமே ஏதேதோ நினைந்து மயங்குகிறது.

சித் :—அன்னமே, உயிர் வாழ்வின் இன்ப துன் பங்களே என் மனத்தி லெழுகின்றன. நமது இன்ப வனத்திற்கு வெளியே உலகம் எப்படி யிருக்கிறதென்று காணவேண்டும். நேற்றே சின்னனிடம் சொல்லியுள் ளேன். என்னை இங்கே இன்பக் கைதியாக்கிய தந்தைக் கும் செய்தி விடுத்துள்ளேன். அடுத்த புதன்கிழமை ஊரைச் சுற்றி உலகியல்பை அறிவேன்.

யசோ :—கண்ணாளா, இருக்குமட்டும் இன்பம் என்றிருப்போம். இனி, ஆனந்தபவனம் சென்று, சற்றே பந்து விளையாடிப் பிறகு உச்சி மாடியில் சந்திர காந்தக் கல்லி லமர்ந்து, அமுதுண்போம். இன்று கோமதி இன்பமாகப் பாடுவாள்.

[வருதல் மோகனு]

மோகனு :—வணக்கம் ; மங்களம் ; அம்மா, மன் னருக்கு ஆனந்தபவனத்தில் வேண்டிய இன்பக் காட் சிகள் தயாராக உள்ளன. மான்களும், மயில்களும் அங்கு விளையாடிக் கொண்டிருக்கின்றன. கோமதி இன்பமாகப் பாடுகிறாள். மயில்களுக்கு முத்து, நடை

பயிற்றியுள்ளாள். மான்களுக்கு மோகனம் துள்ளி விளையாடக் கற்றுக் கொடுத்திருக்கிருள்.

யசோ :—நல்லது, நாதா, செல்வோம்.

சித் :—

ஆத்ம சுகமுளதோ—இந்த
ஆசை விலங்கினிலே—புழு
தீத்திரளைத் தொடுமோ—மாயை
தீரரை வென்றிடுமோ?

[செல்லல்]

---

## 6. பறை சாற்றல்

[வள்ளுவர் முரசடித்து வருகின்றனர்]

இன்ப மின்ப மின்பமென்று பாடுவோம்;
இவ்வுலக வாழ்வி லின்பந் தேடுவோம்!

ஒரு வள்ளுவன் :—எல்லாருங் கேளுங்கள். அரசன் ஆணை :—நாளைக் காலை நமது இளவரசர் தேரிலேறி ஊரைச்சுற்றி பவனி வருவார்; வீதிகளைத் தோரணங் கட்டி அலங்கரியுங்கள்; வீடுதோறும் கோலம் போட்டுக் கொடிகள் கட்டி அலங்கரியுங்கள். ஆண், பெண், குழந்தை யடங்கலும் புத்தாடை யணிந்து, சிரித்த முகத்துடன் அஷ்ட மங்கலங்களும் ஏந்தி, இளவரசரை எதிர் பார்த்து நில்லுங்கள்; கவனியுங்கள்.

மகா ராசாவின் கண்டிப்பான உத்தரவு :—கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, சொள்ளை, குள்ளை, யாரும் நாளைத் தெருவில் வரக்கூடாது. நோயாளரும் கிழவரும் கண்டிப்பாக வரக்கூடாது. இளவரசர் பார்க்குமிடமெல்லாம் பொன்னும், பசுமையும், புன்னகையும், ஆரமும், தோரணமும் விளங்க வேண்டும்;

பாட்டும் மேளமும் முழங்க வேண்டும்! "இளவரசனுக்கு இன்ப மாகுக!!' என்று எல்லாரும் வாழ்த்த வேண்டும். அழுகைச் சத்தமே கூடாது. குழந்தைகள் அழாது பார்த்துக்கொள்ள வேண்டும். கவனமாய்க் கேளுங்கள்: உள் வருந்தினாலும் உதடு சிரிக்கட்டும்; உடல் மெலிந்தவர் பலமாக உடுப்புகளைப் போட்டுக் கொள்ளுங்கள். கறுப்பா யிருப்பவர் சாயம் பூசிக் கொள்ளுங்கள். பெண்கள் வரிசையாக நின்று ஆலாத்தி யெடுங்கள். இன்பம், இன்பமென்று பாடுங்கோ!

முரசு :—

இன்ப மின்ப மின்பமென்று பாடுவோம்
இவ்வுலக வாழ்வி லின்பந் தேடுவோம்!

[வள்ளுவர் செல்லல்]

---

## 7. கிழவன் கதை

[திரைக்குப் பின்னால் பலமான சத்தம், கொட்டு முழக்கு]

தங்குலக மின்பம்—இதைத் - தாங்குஞ் சக்தி யின்பம்
இங்கு மெங்கு மின்பம்—உயி - ரெய்தும் வாழ்க்கை யின்பம்!
சிங்கம் போன்ற வீரர்—காதற் - சித்திரத்தைப் போன்ற
மங்கை மாரொ டாற்றுஞ்—செய்ய-வாழ்க்கை யின்ப மின்பம்!

சித்தார்த்த மன்னன் நீடு வாழ்க! இளவரசர் இன்புறுக!

[திரை உயருகிறது. தேரில் சித்தார்த்தன் காணப்படுகிறான். சுற்றிலும் அழகிய வீரரும், மாதரும், பசுங் காட்சியும். சின்னன் தேரோட்டுகிறான்]

சின் :—ஆயுஷ்மான், இப்பேரின்பக் காட்சியைப் பாருங்கள். எங்கும் அழகு, முறுவல், இளமை, இன்பம்.

சித் :—ஆம், காணும் முகமெல்லாம் கமல நகை புரிகின்றன. தோன்றுங் காட்சியெல்லாம் அழகு துலங்குகின்றன. எல்லாரும் இப்படியே இன்பமா இருக்கிறார்களா ?

சின் :—ஆமாம்.

சித் :—உலகெல்லாம் இப்படியே இன்பமா யிருக்கிறதா ?

சின் :—ஆம் ; எல்லாம் இன்பமே.

கூட்டம் :—தங்குலக மின்பம்..........

சித் :—காண்பதும் இன்பம், கேட்பதும் இன்பம். உலகில் துன்பமே கிடையாதா ?

சின் :—உண்மையாக.......

[திரைக்குப் பின்னல்]

டாணு :—அட, போ, போ, க்ஷாம தேவதை. எங்குப் பூந்தாய் ! தொலையப்படி. மீறினுல் எலும்பு நொறுங்கப் போடுவேன்.

கிழவி :—ஐயோ, வயிறு பசிக்கிறதேஎ ! ஐயா, ஒரு காசு கொடுங்க. ஐயா, பிச்சை !

டாணு :—போ, அந்தப்புறம், தரித்திரப் பேயே, இங்கே வந்து இழவு கூட்டாதே. சத்தம் போட்டால் சட்டினியாக்குவேன். பத்திரம், போ அப்புறம், கிழட்டுப் பிணமே.

சித் :—அதென்ன சத்தம் ? ஓகோ, அங்கு ஏதோவொரு ஜந்து வருகின்றதே. அதையேன் நமது சேவகர் அப்படிக் கொடுமையாக விரட்டுகின்றனர் ?

சின் :—கெட்டது காரியம் ; அதை ஆயுஷ்மான் பார்க்கக் கூடாது.

சித் :—ஏன் ?

சின் :—மன்னன் கட்டளை.

சித் :—நான் பார்க்கத்தான் வேண்டும். இதோடு தேர் நிற்கட்டும்.

[ஒரு தொண்டு கிழவன், எலும்பெடுத்துக் கூனிக் குறுகி, இருமிக்கொண்டு கோலூன்றி வருகிறான்]

டாணு :—தொலை யென்றால் மறுபடி இடித்துக் கொண்டு போகிறதே! அடா வழி இப்படி ; குருட்டு நாயே, அங்கே போனால் சுட்டிடுவேன்.

சித் :—சேவகர்காள், அதை நான் காணட்டும்.

கிழ :—ஐயா, வயிறு பசிக்கிறதே! ஒரு காசு கொடுங்க ; குளிரு நடுக்கிறதே ; ஒரு பழைய வேட்டி கொடுங்க ; ஐயாஅ, மஹராசா, மஹராஅ சா அ.

சித் :—சின்னா,இது என்ன பரிதாபமான காட்சி! இது என்ன ஜந்து ?

சின் :—மன்ன, இவனொரு மனிதன்.

சித் :—எனில், இவன் கந்தலுடுப்பதேன் ?

சின் :—வறுமை.

சித் :—நரைத்துத் திரைத்ததேன் ?

சின் :—வயதால்.

சித் :—கூனிக் குறுகிக் கொம்புபற்றி நிற்பதேன் ?

சின் :—முதுமையால்.

கிழ :—நல்ல மஹாராசாஅ! பசி தலையைச் சுழற்றுகிறது.

சித் :—சின்னா, ஏனிப்படி ஈனக்குரலில் பேசுகிறான் இவன் ?

சின் :—பசிப் பிணியால்.

சித் :—பசியென்ருல் என்ன ?

சின் :—உணவு வேண்டுமென்ற விருப்பம்.

சித் :—ஆ ! நான் இன்ப மாளிகையில் பாலுந் தேனும் அமுதுங் கனியும் உண்கிறேன். எனக்குப் பசியென்பதே தெரியவில்லே. உலகில் பசியால் வருந்தும் முகத்தை இன்றே பார்த்தேன். சின்ஞ, இவன் மன முடைந்து தளர்ந்ததேன் ?

சின் :—கவலேயால்.

சித் :—ஆ ! கவலே யென்ருென்றுண்டோ ? அது அனேவர் மனத்தையும் கௌவும் வலே போலும் !

கிழ :—மஹராசாஅ....நாளேக்கி என்னேச் சாக்காடு கொண்டு போகும்....இன்றைக்கி....பசிக்கி ஒரு பிடி சாதம் போடுங்கோ.

சித் :—விநோத மொழிகள் பேசுகிருனே ! நாளே யாம் ! சாக்காடாம் ! அப்படி யென்ருல்.... ?

சின் :—மன்ன, இவன் தொண்டு கிழவன். இவ னுக்கு வயது எண்பதிற்குமேல் ஆயிற்று. உடல் தளர்ந்து பூட்டு விட்டது. உயிர் விளக்கில் எண்ணெய் வற்றிப் போயிற்று.

சித் :—இவன் ஒரு காலத்தில் என்னேப்போல் இளமை யுற்றிருந்தானே ?

சின் :—ஆமாம் ; இவன் நம்மைப் போல ஒரு காலத்தில் தள தளவென்று இளங்காளேயா யிருந்தான்:

சித் :—இவன் இப்படியானதேன் ?

சின் :—காலத்தின் அலங்கோலத்தால்....தாத்தா வானன்.

சித் :—நானும் அவ்வளவு காலமிருந்தால் இப்படியாவேனோ ?

சின் :—ஆம்.

சித்:—யசோதரையும் அவ்வளவு காலமிருந்தால்....

சின் :—அப்படித்தான்.

சித் :—பாகீரதி, கௌதமி, முத்து, மோகனு, கோமதி எல்லாரும்....

சின் :—ஆம், வாலிபன் கிழவனுவான். பச்சிள மின்னார் பாட்டியாவார்.

சித் :—ஆ ! பிணி, மூப்பு, சாக்காடு....இவையே வாழ்வின் சரிதை....மனத்திற் பதிந்தது....!

கிழ :—ஐயா....பிச்சை.

சித் :—[இறங்கி வந்து] உலகத் துயரின் உண்மை வடிவே, உன்னைக் கண்டேன் ; உலகைக் கண்டேன். ஐயா....இதோ பசிக்குச் சாப்பிடுங்கள். [கனிகளைத் தருதல்] இதோ இப்பட்டு ; இதை யணிந்து கொள்ளுங் கள்.

கிழ :—என் தங்க மகாராஜா, நீடூழி வாழ்க ! அ அஹ்ஹஹ் [இருமுதல்]

சித் :—பெரியவரே, தாங்கள் இப்படி முதிர்ந்து செயலற்றுப்போனதேன் ? விவரமாகச் சொல்லுங்கள்.

கிழ :—இஹ், இஹ், இஹ், கேளுங்க மகாராசா, என் கதையை :—

தங்கச் சிலை போல—சதை-தழ தழத்தி ருந்தேன்—என்
அங்க வடிவினிலே—பெண்கள்-ஆசை வைத்திருந்தார்—வளர்
திங்களெனப்பெருத்தேன்—போகச்-செல்வங்களுஞ்சுகித்தேன்
எங்கும் புலவ னென்றே—இசை-யெய்திப் புகழ் சிறந்தேன் !

கண்மணிச் செல்வருண்டு—காலு-காணியும் பொன்னு முண்டு;
பண்மணி யென்மனைவி—என்மேற்-பாசமுங் கொண்டிருந்தாள்
மண்ணுலகின்பத்திலே—தேனில்-வண்டெனமூழ்கிவிட்டேன்
கண்கெட் டறுப திலே—தீராக் - காசம் பிடித்த தையா
[இஹ்ஹ ! இஹ்ஹ ! இஹ்ஹ !

பால வயதினிலே—ஓடும் - பாம்பையும் பற்றிடுவேன்—இன்று
கோலைப் பிடித்தேகும்—கிழட்டுக் - கோலமும் வந்ததையா !
வாலிபப் பிள்ளைகளை—எமன் - வாயிற் பறிகொடுத்தேன்
தாலி கட்டியவளும்—தீராச் - சண்டை தொடங்கிவிட்டாள்.

கோடிக் கவலைகளால்—உடல் - கூனிக் குறுகி விட்டேன்
தேடியசெல்வமெல்லாம்—ஒரு-தீர்ப்பினிலேயிழந்தேன்—அந்த
மோடிக் கிழமனைவி—என்றன் - மூஞ்சியி லேயுமிழ்ந்தாள்.
காடி குடித்திடவும்—ஒரு - காசு கிடைப்ப தில்லை.

அந்தப் பிடாரியையும்—எமன் - ஆகா விழுங்கி விட்டான் !
இந்த நிலையினிலே—நானும் - ஏங்கி நலிகின்றேன்;
எந்த மனிதனையும்—உல - கின்னல் விழுங்கி விடும்;
விந்தை யில்லையரசே—நீயிவ் - வேடமும் போடவரும் !

சித் :—ஆ ! முதியோய், என் விழியைத் திறந்தாய் ....வந்தனம். இந்தா இவற்றை வயிறார சாப்பிடு.

[இன்னும் கனிகள் தருகிறான்]

கிழ :—போதும் ! போதும். மகாராசா....சுமக்கக் கூடச் சீவனில்லை.

[கனிகளுடன் அங்கேயே உட்காருகிறான்]

சித் :—சின்ஞ்....வாழ்வின் துன்பச் சித்திரம் மனத்திற் பதிந்தது; இனி ஏமாறேன். இந்த ஜோடிப்புகளும்.... இந்த வரவேற்புகளும், முகமன்களும், போலிப் புன்னகைகளும் என்னையே எளனம் செய்கின்றன. இவற்றின் பின் சாவு சிரிக்கிறது.

கூட்டம் :—

தங்குலகமின்பம்—இதைத் - தங்கு சக்தி யின்பம் !...

சித் :—அந்தோ ! இந்தப் பாட்டு என் காதில் நாராசம்போலப் பாய்கிறதே ! உயிர்கள் வருந்தும் வருத்தம் என் நெஞ்சில் துடிக்கின்றது. இனி இப்போலி இன்ப வர்ணனைகள் வேண்டா..........! தேரைத் திருப்பு, சின்ன..........சாதாரணமாக, எளிய வுடையுடன் சென்று உலகோர் வாழ்வைக் காண்போம். உலகியல்பைக் கண்ணுற் கற்றுக் கருத்திலெழுதிக் கொண்டேன்.

இளமை யென்ப திரவிமுன் மஞ்சளே ;
வளமை யென்பது வாழ்வுடைனேயுமே ;
கிழமை யென்பது கிட்டு முயிர்க்கெலாம் ;
நிலைமை யொன்று நிலத்தினி லில்லையே.

சேவகரே :—அவ்வேழையை அன்புடன் வீடு சேர்வியுங்கள். அவன் உள்ளமட்டும் வேண்டியதைத் தருவோம். [செல்லல்]

டாணு :—கிழவா, எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போட்டாய். குழந்தை மகராசா இரக்கத்தாலே பிழைத்தாய். இன்றேல் உன்னை என்ன செய்வேன் தெரியுமா ?

கிழ :—ஐயா.....காதடைக்கிறது.....கண்ணிருண்டு வருகிறது [கோல்பிடித்து எழுந்து நிற்கிறான்] வீடு சேர வேண்டுமே...............

டாணு :—போ, சுடுகாடு........உன்னைக் கொண்டு விடணுமாம். இந்த ராசா மகனுக்குக் கௌரவம் தெரிவதில்லை. குப்பைக்காட்டு கிழவனோடே சரிசமமாய்ப் பேசி...............

கிழ:—ஐயா, சாவும் மூப்பும் எல்லாருக்கும் சமமே.

டாணு :—ஆமா ; நீ கண்டாய் சாத்திரம்; போ ; முன்னே உன்னைக் கொண்டு தொலைக்கிறேன்........

கிழ :—தெய்வமே....என்னை யேனின்னும் இங்கே வைத்துச் சோதிக்கிறாய்........சீக்கிரம் கொண்டுபோ. இஹ் இஹ் இஹ்.

டாஞ:—அட வுன்னைக் கொண்டுபோக....கம்பை வலிவா ஊன்றி நட. நத்தை நடை நடக்கிறான்.

[கிழவனை முன்னே தள்ளிக்கொண்டு செல்கிறான்]

---

## 8. கனவும் துறவும்

[பள்ளியறை ; யசோதரை ராகுலனுடன் ஒரு புறம் உறங்குகிறாள். சித்தார்த்தன் சிந்தனையி லிருக்கிறான்.]

**ம**னமே உலகம். உலகமே மனம். எத்தனை காட்சிப் படலங்கள்! என்னே உலகியல்பு! வணிகன்போல உடை தரித்து, உலகம் இருந்தவாறு நேற்று அறிந்தேன். வறியோர் துயரை அரசர் அறிகிலர். ஒவ்வொருவரும் பிழைக்க எவ்வளவு பாடுபடுகின்றனர். பல்லக்கேறியவன் போகியின் வேர்வைத் துளி சிந்துவதை யறிகிறானா? இடுப்பில் குழந்தையும் தலையில் குடமுமாக மனைவியர் வீட்டு வேலை செய்கின்றனர். வீட்டிற்கு வீடு ஒரு துன்பக் கதை யிருந்து கொண்டே யிருக்கிறது. உழவன், சேணியன், செக்கான், கருமான் முதலிய தொழிலாளர் நெற்றி வேர்வை நிலத்தில்பட எத்தனைப் பாடுபட்டு வயிற்றை வளர்க்கின்றனர். இச்சோம்பேறி யின்பம் என்னை எள்ளனஞ் செய்கின்றது. உலகில் பணம் படும் பாடும், பணம் படுத்தும் பாடும், செல்வச் செருக்கும், எளியோர் அழுகையும், போகப் பிணியும், தேகப் பிணியும், மோகப் பிணியும், சோகப் பிணியும், சாதிப்

பிரிவும், சமயச் சழக்கும், வாதப் புயலும், உயர்வு தாழ்வும், யானெனதென்னும் ஆணவ மாயமும், கூத்தியும், குடியுங் கொலையும், சூதும் பொய்யும், திருட்டும், வஞ்சமும், மடமையும், காமமும், சினமும், கலக்கமும் கண்டேன். அந்தோ!இத்துயர்களுக்கு எல்லையுண்டோ? (கண்ணீர் பெருகி) உலகே, உலகே, உயிரே, உயிரே, உயிரே, உன்னுயிர் என்னுயிர், உன் துயர் என் துயர்.... (சற்றே தாமதித்து) ஆ! கண்டேன்; கண்டேன். சாவைக் கண்ணுற் கண்டேன். அந்த ஏழை, 'ஐயோ! ஐயோ!' என்றலறி, வலிப்புண்டு, நாக்கு உள்ளே யிழுத்து, இறந்ததைக் கண்ணுர அருகிருந்து நன்கு கண்டேன்; கண்டேன். உலகமெல்லாம் சாவின் கொடுங்கோல் தாண்டவமாடுகிறது. நாலால் தவழ்ந்து, இரண்டால் நடந்து, மூன்றால் தள்ளாடி மனிதன் முடிவில் ஏணியேறி, எமலோகஞ் சேரும் விந்தைதானென்னே! உறங்கினோன் உயிரோடெழுவதென்ன உறுதி? ஆ! சாவே, சாவே, இந்தப் போலியின்பத் திரைக்குப் பின்னிருந்து என்னைப் பார்த்துக் குறுநகை புரிகின்றாய். உயிர் வேட்டுவனே, உன் கூரிய அம்பை யாரே தடுக்க முடியும்? இன்பம் துன்பமாகிறது. இனிப்புக் கைத்துப் போகிறது. நட்புப் பகைமையாகிறது. இளமை முதுமையாகப் பழுத்து உதிருகிறது. இந்த இன்பதுன்பக் கரைகளுடே வாழ்வாறு சாவை நோக்கி விரைகின்றது. எண்ண எண்ண மனம் பகீரென்கிறதே........வீழ்ந்தது மாயத்திரை. உயிரிரக்கம் என்னை உந்தித் தள்ளுகிறது. உலகே, வருகிறேன்; வருகிறேன். உனக்கொரு மருந்து தேடி வருகிறேன்.

[யசோதரை திடீரென விழித்தெழுந்து சித்தார்த்தனைத் தழுவிக் கொள்ளல்]

யசோ :—நாதா, நாதா, என்னுயிர்க்குயிரே, என்னின்பமே.......ஆ! ஆ!

சித் :—என்ன யசோதரா?

யசோ :—என்ன கனவு கண்டேன். மனந்துடிக்கிறதே! சென்ற ஒருவாரமாக என் மனம் கலங்கிக் கலங்கி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுகின்றதே! நாதா, நாதா, என்னுருயிர் நாதா, அப்படி யேதேனும்.... நடந்தால்.... (கண்ணீர் விடுதல்)

சித் :—அழாதே, என் தங்கமே, என் அஞ்சுகிறாய்? என் அன்னமே, அழுதே, அழாதே. கண்ட கனவென்ன?

யசோ :—பொன்னும் மணியும், பாட்டும் ஆட்டமும், அழகும் அணியும், பூவுங் கனியும், செல்வமும் சிறப்பும், விருந்தும் விளையாட்டும் நிறைந்து குலுங்கும் இவ்வின்ப மாளிகை இருளாகக் கண்டேன். உலகெல்லாம் விரிச்சென்றிருந்தது. அப்போது நமது அன்பிற் கருங்கனியான மதலை ராகுலன் என்மார்பில் வசந்தமலர் போலுறங்கினான். திடீரென்று ஒரு வெள்ளைக்காளை தெருவோடு சென்றது. அதன் நீண்ட சிவந்தகொம்பில் நாகமணி பளிச்சிட்டது. "இக்காளையை உடனே நிறுத்தாவிடில், இந்நகர் சிறப்பிழக்கும்" என்று இந்திராலயத்தினின்று ஒருவாக்கெழுந்தது. அக்காளையை இப்படி இறுகத் தழுவிக்கொண்டேன். என் கையை நழுவித் தடைகளைத் தகர்த்து, அக்காளை மாயமாய்ப் போயிற்று. நாதா, நாதா, பிறகு நமது நகர வாயிலில் ஆடும் இந்திரன் பொற்கொடி இற்று விழக் கண்டேன்.

பிறகு அதனிடத்தில் ஒரு இரத்தினக்கொடி பளிச்சிடக் கண்டேன். அதில் சில மஹா வாக்கியங்கள் விளங்கின. அதைக்கண்டு உலகெலாம் மகிழ்ந்தன. பிறகு பூமழை பொழியக் கண்டேன்.

சித் :—இவையெல்லாம் நல்லன தானே! ஏன் கலங்குகிறாய்?

யசோ :—ஆ! திடீரென, "வேளை வந்தது; வேளை வந்தது" என்றொரு பயங்கரமான சொல்லைக் கேட்டேன். உடனே என் பூமெத்தை வெறுமையானது. முன்னிருந்த காட்சிகள் மறைந்தன. என் மார்பணிகள் பாம்புகளாக மாறின. கொண்டை மலரும், முக மலரும் வாடின. மாளிகை விரிச்சிட்டது. துயர் மூண்டது. திடீரென அந்த வெள்ளைக்காளை மீண்டும், "வேளை வந்தது" என்று கம்பீரமாக ஒலித்து வந்தது. யானும் விழித்தேன். நாதா, நாதா, என் மனம் துடிக்கிறது. மாமனாரும் இதே மாதிரி ஏழு கனவுகள் கண்டார் என்பது தெரிகிறது. என்னை விட்டுப் பிரிவீரா?

சித்தா :—ஏன் அஞ்சுகிறாய்? என் பஞ்சவர்ணக் கிளியே, அமைதியா யுறங்கு.

யசோ :—தாங்கள் முன்னே உறங்குங்கள்.

சித்தா :—என் இமை மூடவில்லையே........

யசோ :—நாதா, ஏதேதோ நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

சித் :—இல்லையடீ என் கிளியே, அமைதியா யுறங்கு.

யசோ :—தாங்கள்....

சித் :—எனக்கு உறக்கம் வரவில்லை.

யசோ :—அப்படியானால்....... பாகீரதீ, கோமதி, வீணை கொண்டு வாருங்கள். முத்து, மோகனா, சற்று ஹம்ஸ நடனம் புரியுங்கள்.

[கோமதி, பாகீரதி ஆகிய இருவரும் வீணை கொண்டு பாடுகின்றனர். முத்தும், மோகனாவும் ஆடுகின்றனர்]

சித் :—(மனதுள்) உலக மாயமே, இன்னும் என்னைப் பாடியாடி, மினுக்கி மயக்கி, உன் பொய் வலையிற் சிக்க வைப்பாயா ? 'நில்லாதே, உடனே வா' என்று ஏதோவொன்று என்னைக் கானகத்திற்கு அழைக்கின்றதே ! இதோ வருகிறேன். இந்த உலக மாயையை உறங்க வைத்து வருகிறேன். (வெளிப்படையாய்) கண்ணே என் கண் மயங்குகிறது. போதும் பாட்டு நன்றாயிருக்கிறது.

யசோ :—சரி ; முத்து, மோகனா, கோமதி, பாகீரதி, நீங்கள் எல்லோரும் சென்று படுத்துக் கொள்ளுங்கள்.

எல்லாரும் :—சாமி, வணக்கம்; இன்பம் பொங்குக!

[செல்லல்]

யசோ :—நாதா, யான் தங்களை இம்மலர்களால் அலங்கரிக்கின்றேன்.

[மலர்களைச் சூட்டிப் பொட்டிட்டு ஒரு முத்தமிடுகிறாள்]

என் மீது பிரியமில்லையா ?

சித் :—ஏனப்படிச் சொல்லுகிறாய் ? இதோ யானுனக்கு அணிகள் பூட்டி, என் அன்பை உன் கன்னத்தில் மலரச் செய்கிறேன்.

[அணிகள் பூட்டிப் பொட்டிட்டு...]

யசோதரா, என் கண்ணே, நாழிகையாயிற்று. இனி உறங்குவோம்.

யசோ :—நாதா, குழந்தையைப் பாருங்கள்.

சித் :—எனதருமை ராகுலன், தாமரைமீது அன்னக் குஞ்சு போலுறங்குகிறான்.

யசோ :—தங்களைப்போலவே அவன் ஒரு பெரிய வீரனாவான்.

சித் :—அவ்வாறே ஆகட்டும் என்னருமை ராகுலன் ! சற்று உறங்குவோம்.

யசோ :—நாதா, என் மடிமீது தலை வைத்து உறங்குங்கள்.

சித்தா :—அப்படியே, என் கண்ணே.

சித் :—(உறக்கத்தில்) ஆ ! வரு-கி....றேன் வருகிறேன்....உலகே....உயிர்காள்....வருகிறேன்.

யசோ :—(திடுக்கிட்டு) நாதா, நாதா.

சித் :—என்ன ?

யசோ :—என்ன புலம்புகிறீர்கள் ? எனக்குப் பயமாயிருக்கிறதே. நாதா, நாதா.

யசோ :—ஒன்றுமில்லை ; என் கண்ணே, நிம்மதியாக உறங்கு....

[எல்லாரும் உறங்கல்]

[வருதல் கனவில் கிழவன்]

சித் :—ஆ !....என்ன காட்சி ? யார் இது ? யார் ?

கிழ :—வாழ்க்கைக் கிழவன் ?

சித் :—என்ன செய்தி ?

கிழ :—அழைக்க வந்தேன். வேளை வந்துவிட்டது. கேளாய், சித்தார்த்தா :

இறைவ னாயினும் ஏழைய னாயினும்,
பறைய னாயினும் பார்ப்பன னாயினும்,

*பிறப்ப வர்கள் பிணியுற் றிறுதியில்*
*இறப்ப வர்க ளிதனை யறிகுவாய்.*

சித்தார்த்தா, அரசாட்சி வேண்டுமா? அருளாட்சி வேண்டுமா ? பின்னதாயின் முன்னே செல். வழி திறக்கப்பட்டுள்ளது. எழு, விழி, அறி. ஆசை விலங்கை அறு. [கிழவன் மறைதல்]

சித் :—ஆ! எழுந்தேன் ; அறிந்தேன்; இதோ துறந்தேன் ; உலக மாயையே, இவர்களை நன்கு உறக்கு. ஆசை யழிந்தது. அச்சமொழிந்தது. தங்கத்தளை அறுந்தது. ஆருயிரிரக்கமே, நீ என்னை நடத்து. உன் வழிச் செல்கின்றேன்; என் உயிர்க் காதலீ, யசோதரா, என்னன்புக்கனியே, ராகுலா, உங்களிடம் மௌன விடை பெற்றுக்கொள்கின்றேன் :

*அன்றிலிற் பிரியா தென்னை யணைந்துறை யிளமென் பாவாய்,*
*என்றனி ரமுதச் சேயே, எனதியா னென்ப தெல்லாம்*
*ஒன்றிய வுயிரி ரக்கம் உண்டது ; போக வாழ்வே,*
*உன்றனை யாசைக் கட்டே யுன்றனை யுதறிச் செல்வேன்.*

அடிகாள், அடியெடுத்து வையுங்கள். வைத்த அடி மீளற்க [செல்கிறான்] [மீண்டும் வந்தது] பாசமே, மீண்டும் இழுக்கின்றாய். என் கண்மணிப் பாவையை என் ஒரு பொன் மணிச் சேயை முடிவாக ஒரு முத்த மிட்டுச் செல்கின்றேன்.

*சோகுறு முலக மாயை துயரெனத் தெளிந்து, பற்றின்*
*மோகுறு விலங்கை யின்னே முறித்தெறிந் துயிர்கட் கின்பம்*
*ஈகுறும் ஆர்வங் கொண்டேன்; இனியதா மருந்தை நாடிப்*
*போகிறேன் உறங்குங் கண்காள், புகலுமின் விடையெ னக்கே.*

விடைபெற்றேன் ; உறங்கும் விழிகாள், யான் கானகஞ் சேருமட்டும் உறங்குமின். இதோ சின்னனை

யெழுப்பி எனது கண்டகனைக் கொண்டுவரச் சொல்லு கிறேன். அதன்மேலேறி, வீர வைராக்கியம் மனோ வேகத்துடன் கான் செல்க!

ஆ....இதோ வருகிறேன்....உலகே....இதோ! இனி இங்கு அரைக்கணம் நிற்க முடியுமா?

தங்கமா ளிகையெல் லாம்வெந் தணலெனக் கொதிக்கு தே;யிச்
சங்கையிற் போகத் தின்பின் சாவுபுன் சிரிக்கு தே;மென்
கொங்கைய ராடல் பாடல் கூடலோ டிடும்பைப் பாசச்
சங்கிலி கௌவு தையே தாங்கிலேன் நீங்கு வேனால்.

என் தயக்கம்? மனமே முன் செல், செல்.

பொன்னெலாம் புவியின் மாசு;
பொருளெலாம் பொன் றும் மண்ணே;
பெண்ணெலாம் பிணியின் றூது;
பிறப்பெலா மிறப்பி னேயன்;
மண்ணெலா மகந்தை; யிந்த
மாயமா வலையிற் பட்டாற்
புண்ணலால் வேறொன் றில்லை;
போகிறே னடவி யின்னே.

[போகிறான்]

[திரைக்குப்பின்னே: கதவுகள் வழி விட்டன. சின்னா, குதிரையைத் தயார் செய்]

சின்:—எஜமான், தயார்.

சித்:—

சிறையெனச் சுற்றி வஞ்சச்
சிரிப்பினால் எனைப்பி ணித்த
உறவெலாந் துறந்தேன்; தன்னந்
தனிமையே உறவாய்க் கொண்டேன்,

அறிவெனு மலேமீ தேறி,
அன்பினைக் கொணர்ந்து, மாந்தர்
பிறவியின் மயக்கந் தீர்ப்பேன் ;
பிறர்க்கென வாழு வேனுல்.

(குதிரை செல்லுகிறது).

[காட்சி முடிவு]

---

# 9. கான் புகல்

காடு இரவு

[குதிரையைப் பின்னே நிறுத்திப் புத்தர் வருகிறுர். சின்னன் தொடருகிறுன்.]

சின் :—ஆயுஷ்மான், தங்களை எப்படிப் பிரிவது? யானும் வருகிறேன்.

புத் :—சின்ன, நீ சீக்கிரம் சென்று, தந்தையிடம் செய்தி தெரிவி. இன்னும் தாமதித்தால் என் காரியம் தடைப்படும். வானிலா வழி துலக்குகிறது. யான் சென்று உயிருய்யும் மருந்துகொண்டு மீள்வேன். இதோ இந்த அரசணிகளை உனக்கு வைத்துக்கொள்.

சின் :—தந்தையிடம் என் சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?

புத் :—"பொய்ச்சுகம் துறந்து மெய்ச்சுகம் அறிந்தேன்; செல்வச் சிறையை நீத்தேன்; சுதந்திரம் பெற்றேன்; கண்விழித்தேன்; உயிர்க்கருணை செழித்தேன்; துன்புறும் உலகிற்கு இன்பமருந்து கொண்டு வருவேன்" என்று தந்தைக்குச் சொல். சின்ன, இனி நான் மௌனமாகச் செல்லுகிறேன்; நீ செல்.

சின் :—(கும்பிட்டுச் செல்கின்றுன். திரைக்குப் பின்னே குதிரை கனைக்கிறது.) என்ன செய்வது கண்

டகா? உன் அருமைத் தலைவனுக்கு இப்படித் தலையில் எழுதியிருக்கிறது. நாம் சொன்னபடிதானா எல்லாம் நடக்கிறது? எஜமான் சொன்னபடி கேளாவிடின் என் தலைபோகும். மஹாராஜா கேட்டால் என் கடமையைக் குறிக்கிறேன். செல் கண்டகா.

[குதிரை கனைத்து ஓடல்]

சித் :—மலர் முடித்து, வாசம் பூசி, மாதர் கோதிப் பலவகை யழகு செய்த மயிரே, போ....போச்சு....

[குடுமியை அறுத்தெறிகிறான்]

கானகமே, என் பொன்னகம் விட்டு, உன்னகம் புகுந்தேன். முனிவர் உள்ளத்தில் அறிவை யெழுப்பும் தனியகமே, உயிருய்யும் உண்மையை எனக்குப் பளிச் செனக் காட்டாய்.

செல்கின்றேன் செல்கின்றே னின்பம்
சேர்கின்றேன் சேர்கின்றே—னென்னை
வெல்கின்றேன் வெல்கின்றேன்—வந்து
வெற்றிவழி யுரைக்கின்றேன். [செல்லல்]

---

## 10. பிக்ஷை

### கானகத்தில் ஒரு குகாச்சிரமம்

காலம் - பகல்

[அஹமாத்மானந்தர் நெடுநேரம் வெய்யிலில் சர்வாங்காசனத்தி லிருக்கிறார்]

[வருதல் ஜகந்மித்யானந்தர்]

ஜகந் :—அஹமாத்மானந்தரே, வெய்யிலாயிற்றே! இன்னுமா ஆசனம். பிக்ஷைக்குப் புறப்படுவோம்.

அஹ :—ஜகந்மித்யா சாமிக்கு எப்போதும் சாப் பாட்டு நினைப்புதான். இன்று 500 பிராணாயாமங்களும்

ஒரு மணி நேரம் ஹடாப்யாஸங்களும் நடந்தன. காலையில் தௌதி வைத்துக் கொண்டேன்; நேரமாயிற்று. கணக்குப்படி இன்னும் கால் மணியாவது செல்லும்.

ஜகந் :—இதெல்லாம் எங்காணும்? உலகமே பொய். காரிய சரீரம் பஞ்சபூத விகாரம். இந்த அன்னமய கோசத்தை எத்தனை நாள் ஹடஞ் செய்து காப்பாற்றப் போகிறீர்.

அஹ :—'உடம்பினில் உத்தமனைக் காண்'............ இல்லையா.

ஜகந் :—ஜீவ ஜகத் ஈஸ்வரன் எல்லாம் அஹமாத்மாவாயிற்றே. அந்தப் பேரை வைத்துக்கொண்டு இதெல்லாம் செய்யலாமா? பேசாமல் மனோ விருத்திகளையொடுக்கி, ஒரு மூலையிலே சும்மா இருப்பதே சுகம். அகங் கிளம்பினால் ஜகம்; அகமடங்கினால் சுகம். இங்கே புதிதாக வந்த கௌதம முனிவரும் இதை விரும்பவில்லை.

அஹ :—ஆம்; அவர் எங்களோடு வாதாடுகிறார். ஹடம் ஹம்ஸ முனிவர், கும்பகம் குண்டலி முனிவர், பந்தம் வாயு முனிவர் முதலியவர்களெல்லாம் அவர்வழி திரும்பிவிட்டார்கள். அவர் தீரர்.

ஜகந் :—ஆம், உலகைத் துரும்பாக நினைத்தன்றோ துறந்து வந்தார். ஆனால், சிறு வயசு. அவருக்கு இன்னும் உலகைக் காக்கவேணும் என்னும் விருப்பம் இருக்கிறது; அதனாலே வருந்துகிறார்.

அஹ :—உலகைக் காக்கவாவது? நாய் வாலை நிமிர்த்திய கதைதான்.

ஜகந் :—தன்னைத்தான் காத்துக்கொண்டால், உலகைத் தலைவன் காப்பான் என்றால் கேட்கிறாரா? நமக்

கென்ன என்று விட்டுவிட்டேன். ஆனால் ராஜஹம்ஸம் போலக் கம்பீர புருஷன்; மஹான்; கருணைக்கடல்.

அஹம்:—நமது காயக்கிலேசம் அவருக்குப் பிடிக்க வில்லை. நமது வழியில் கொஞ்சம் பழகினார். ராஜ சரீரம், பூமேனி தாங்காது; உடம்பு உடைந்துவிட்டது. இப்போது வில்வலங் காட்டிற்குப் போவேனென்கிறார். அவரை எப்படிப் பிரிவது?

[வருதல் கௌதமன் காவியுடுத்து, உடல் மெலிந்து]

கௌதமன் :—என் முத்திக்காகத் தவமல்ல.

மனத்தி லருள்மல்கி மாணுலக முய்யுந்
தனைத்துறந்த தொண்டே தவம்.

இந்தக் குகையில் தியானிக்கும்போதும், உயிரிரக்கமே என்னைப்பற்றி யுந்துகிறது. ராஜகிருகத்தில் பிக்ஷைக்குச் செல்லும்போதெல்லாம், சுற்றும் மக்கள் வாழ்வைக் கண்டு மனங் கசிகிறது. இன்பம் எப்படி யெய்தும்? இன்பமே, என்னுள் உன் ஊற்றெழுக! அதை முகந்து இவ்வுலகெல்லாம் தாகந் தணியத் தருகின்றேன். இந்த ஹடராஜ யோகிகளிடமும் யான் வேண்டிய இன்பமில்லை. இவர் விரும்புவது தம்முயிர்க்கின்பம். நான் வேண்டுவது உலகுயிர்க்கின்பம். அடம்புரிந்து, பட்டினி யிருந்து, இத்தூலாதாரம் விறகாயுலர்ந்ததுதான் மிச்சம். இன்று பிக்ஷையெடுத் துண்டதும் வில்வலங் காடு செல்கின்றேன்.

அஹம் :—வாருங்கள் கௌதமரே, எங்கே சென்றிருந்தீர்கள்?

கௌ :—சற்று அப்படித் தனியே இயற்கையுடன் பேசிவந்தேன்.

ஜகந் :—இயற்கை, மாயை ஐயா, மாயை ; இன்னும் அதையே பேசுகிறீரே.

கேள :—புருஷன், இயற்கை என்று இரண்டுள்ளன. அவை சேர்ந்தால் வாழ்வு ; பிரிந்தால் துறவு.

அஹம் :—சரி, என் காரியம் ஆயிற்று. இப்படிப் பேசினுல் நாளெல்லாம் வாய்ச்சண்டை போடலாம். சீக்கிரம் பிக்ஷைக்குப் புறப்படுங்கள்.

கேள :—பேச்சிலென்ன இருக்கிறது? பேச்சடங்கி மனமடங்கிய பெரிய மௌனத்திலே அமைதியுள்ளது.

ஜகந் :—அஹம்பிரமசாமி, சீக்கிரம் காஷாயம் உடுத்திக் கிளம்பட்டும்.

அஹ :—ஜகந்மித்யானந்தரே, இந்தக் கட்டை பொய்யென்பீரே ; அதற்குத் தீனி போடமட்டும் பறக்கின்றீரே !

ஜகந் :—பிராணுஹுதி வேண்டாமா ? உள்ள மட்டிலே, கிடைத்த மட்டிலே, மூன்றுகால பூஜையாவது நடக்கட்டும்.

அஹ :—உள்ள மட்டில் உண்மை. நான் நன்ருய்ச் சாப்பிட வேண்டும். நான் பிரமம் என்ருல் எல்லாம் என்னிலேதானே அடங்க வேண்டும்.

[மூவரும் கப்பறையேந்திப் புறப்படுதல்]

கேள :—புறப்படுங்கள் ; ஆளுக்கொரு புறமாகச் சென்று, கிடைத்ததைக் கொண்டு வருவோம்.

எல்லாரும் :—

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவிர்
ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணுஹுதம்
ப்ரஹ்மைவ தேனகந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதி ந :
ஹரி ஓம் தத்ஸத். [போதல்]

---

## 11. உயிர் இரக்கம்

[ஓர் ஆட்டிடையன் 5 ஆடுகளை ஓட்டிச் செல்கிருன். ஒரு குட்டி நொண்டிச் செல்கிறது.]

ஆடுகள் :—ஹ்றஅஅம்! ஹ்றஅஅம்!

இடைய :—இந்தலெ - போங்க விரைவா, மஹ ராசா கட்டளை 12-மணிக்குள்ளே வர ணும்னு. இந்த நொண்டிக் குட்டியில்லே சேட்டை பண் ணுது. இந்தலெ, ஒரு குடுகுடுத்தேன்னு....குட்டி....போ தாயோடே.

[தாய் நொண்டிக் குட்டிக்கு இரங்கி நிற்கிறது]

[வருதல் கௌதமன் விரைந்து...நொண்டிக் குட்டியைத் தோளிற் போட்டுக் கொண்டு]

கௌ :—என்னம்மா, ஏன் அழுகிருய்? வேண் டாமடி; உன்னை அடிக்கிருனு? வேண்டாமடி என் தோள்மேலேறி வா.

[ஆடுகளெல்லாம் புத்தரைச் சுற்றி வருதல்]

என்னருமைச் சகோதரர்காள், உங்கள் சேவகன் யான்....[ஆடுகளைத் தடவிக் கொடுத்தல்]

இடையன் :—சாமி, சாமி; ஆட்டைத் தொட லாமா? தெய்வமல்லோ நீங்க?

கௌ :—சகோதரா, என்னுயிர் அதனுயிர். அத னுயிர் என்னுயிர்.

இடை : சாமி, நாங்களெல்லாம் உங்களைக் கும் பிடணும். நீங்க சரிசமனுப் பேசினு எங்களைப் பாவம் பிடிச்சிக்குமே.

கேள:—அப்படி வேற்றுமை பாராட்டுவோருக்கு,

" பிறந்தவ ரெல்லாம்—மனிதா - சிறந்த வர்தாமே
மறந்து மில்லாதே—மனிதா - மமதை கொள்ளாதே "

என்று பதிலுரை. சகோதரா, சாதி, சமய வேற்றுமையில்லாத ஓர் அறிவே நீ, நான், எல்லாம்.

இடை :—என் மந்தை.

கேள :—அதுவும் அப்படியே. இந்த ஊமைச் சகோதரரை எங்கே கொண்டு செல்கிறாய் ?

இடை :—சாமி, மகாராசா இருக்காங்களல்ல.

கேள :—ஆம், பிம்பிசார மன்னன்.

இடை :—ஆமா சாமி. அவுங்களுக்கு.

கேள :—எதற்கு ?

இடை :—யாகம் பண்ணறாங்களாமுல்லே.

கேள :—யார் ? ராஜாவா.

இடை :—இல்லே; பிராமணாள்கள் கூடி மந்திரஞ் சொல்லி....யாகம் சாமி.

கேள :—கொலை....கொலை! எவ்வாறு உயிரை வாங்கினும் கொலை. இந்த யாகத்தின் பெயரால் கொல்வோர் யாக பலத்தால் ஓர் உயிரைப் படைப்பரோ ?

இடை :—எனக்கொண்ணுந் தெரியாது சாமி. ஐயமாருங்கதான் மகாராஜா கட்டளை இன்னாங்க, கொண்டுபோறேன்.

கேள :—என்னன்புயிர்களே, இன்று என்னுயிரீந்தேனும் உங்களுயிரைக் காக்கிறேன். அப்பனே, உன் ஆடுகளை அந்த ஐயமார்கள் கொல்லாது காக்கின்றேன்.

இடை:—நமக்கென்னத்திற்கு சாமீ, வம்பு? சாமி மாருங்க சபிச்சுடுவாங்க! சொன்னபடி செஞ்சிட்டுச் சும்மா இருப்போம்.

கௌ:—உன் மேல் குற்றமில்லை. அச்சத்தாலும், அறியாமையாலும் இப்படிப் பேசுகிறாய். அன்பனே, அருள் வழியே சிறந்த அறம். அதற்குச் சாதி வேற்றுமையில்லை. உயிர், பசி ஆகிய இரண்டும் எல்லாருக்கும் உண்டு.

இடை:—ஆமா சாமி; கொஞ்சம் யோசனை பண்ணினால் தெரியுது. ஆனால் நாம் ஒண்ணு என்னா, அவுங்க பத்துப் பேசி அதட்டுவாங்க. மேலே பேசினா உதை கொடுப்பாங்க; ஏழைக்குப் பேச உரிமை யேது சாமி.

கௌ:—உழைப்பவனே, உனக்கு உலகில் உரிமையுண்டு. வாயில்லாச் சகோதரனே, உனக்கும் அச்சமின்றி வாழ உரிமையுண்டு. போர், கொலை, பழி, பாவங்கள் பூதேவியின் இரத்தத்தை யுறிஞ்சாதொழிக. வா, சகோதரா. செல்வோம். வாயில்லாச் சகோதரர்களே, செல்லுங்கள். என் பொன்னம்மா, என் தோள் மேலே சுகமாயிருக்கிறாயா?

[குட்டி கனைக்கிறது. கௌதமர் அதைத் தடவிக்கொடுக்கிறார்]

[ஜோர் ஜோரே என்ற மெட்டு]

**பல்லவி**

செல்வோம் கொலை மறுக்கச் செல்வோ மன்பரே, வாரீர் (செ)

**அனுபல்லவி**

தொல்லுலகிற் படுகொலைகள்
சொல்லொணாது சொல்லொணாது (செ)

3995

**சரணம்**

மனிதரை மனிதர் சுட்டு - மாய்க்கின்றார்களே, நிதம் ;
இனிப்பொறுக்க முடியாதையோ இவ்வுலகிற் போர்வினைகள்()
வாயில்லா வுயிர்களை வதைக்குங் கோர மென் சொல்வேன்...
ஆயவோ இதை நினைத்தால் அங்க மெல்லாம் பதறுதம்மா(செ)
பூவெலாம் புனித முற்றுப் பொலிக சாந்த மென்றுமே
ஜீவ காருண்ய சக்தி யெங்கும் திகழ மகிழ அகில மெல்லாம்.

[போதல்]

---

## 12. ஜீவகாருண்யம்

[யாக மண்டபம் ; புத்தர் ஒரு புறம் நிற்கிறார். **பிம்பிசார** மன்னன் எஜமானனாகி ஒரு புறம் வீற்றிருக்கிறான். ஒரு ஆடு யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்டுள்ளது. கோகர்ண சாஸ்திரிகளும், குண்டல தீக்ஷிதரும் கத்தி பிடித்து யாக மந்திரம் சொல்கின்றனர். ஆடு இடையிடையே கத்துகிறது]

ஆடு :—ஹஅஅ ! ஹஅஅ ! ஹஅஅ !

குண்டல<br>கோகர்ண } :—

ஓம் பூர்புவஸ்ஸுவ : தத் ஸவிதுர் வரேண்யம் ;
பர்கோதேவஸ்ய தீமஹி; தியோயோன ப்ரசோதயாத்;
அக்நிமீளே புரோகிதம்......
.......................................
ஆஸ்ராவய......ஸ்யாம......வஷட்

[கத்தி யெடுத்து ஆட்டை வெட்டப்போதல்]

[உடனே புத்தர் வருகிறார். வந்தவுடன் சபையோர் எழுந்து மரியாதை செய்கின்றனர்]

பிம்பி :—வரவேண்டும்....ஸ்வாமிகள் இப்படியிருக்கட்டும்.

புத் :—முதலில் அந்த உயிரைக் காக்கிறேன்; பின்பு உட்காருகிறேன். அந்தணாளரே, இந்த அருமையான உயிரை மாய்க்கவேண்டாம்.

குண்டல :—கோஸி ?

கோகர்ண :—குத்ரோஸி ?

புத் :—எல்லாருக்கும் தெரிந்த மொழியில் மூடு மந்திரமில்லாமல் பேசுவோம். இவ்வுயிருக்கு இரங்குங்கள்.

குண்ட :—யார் நீ ? வேதம் படித்திருக்கிறாயா ?

புத் :—வேதத்தைப் படித்தல் நலமோ, அறிதல் நலமோ ?

பிம்பி :—அறிதல் நலம்.

கோகர்ண :—அதைவிட அதன்படி நடத்தல் நலம்.

குண்டல :—அதற்காகத்தான் யாகம் செய்கிறோம்.

புத் :—வேதயாகம் இதுவன்று. ஆணவத்தை ஆத்மாக்னிக்கு ஊணாக்கலே வேள்வி. தன்னலத்தைப் பொது நலத்திற்கீதலே யாகம், தியாகம் எல்லாம். வேதம் என்றால் என்ன ?

கோகர் :—ருக், யஜுர், சாமம், அதர்வணம்.

புத் :—அல்ல ; வேதம் என்றால் அறிவு ; அறிவு எல்லையற்ற நூல். யோகிகளின் உள்ளே அருளாற் பிறக்கும் நிறைமொழியே வேதம்.

குண்டல :—இவன் வம்பன். கோகர்ண சாஸ்திரிகளே, உமது காரியத்தைப் பாரும். போடும் ஷட் !

[கோகர்ண சாஸ்திரிகள் கத்தியோங்கல்]

[ஆடு கனைத்தல்]

புத் :—அந்தணாளரே, அதன் உயிரும் என் உயிரும் ஒன்று. என்னை வெட்டுங்கள். என் வாயில்லாச் சகோதரனை விட்டுவிடுங்கள்.

[ஆடு புத்தரைப் பணிகிறது]

புத் :—பயப்படாதே, என்னருமைக் குழந்தையே, ஐயோ ! இக்கத்தியைக் கண்டு உன் குடல் பதறுகின்றதே ! என்னுயிரை யீந்தாயினும் உன்னைக் காக்கிறேன்.

கோகர் :—விடுமையா, மஹா வித்வான்போல வாதாட வந்துவிட்டாய். உமக்குக் கர்மகாண்டம் தெரியுமா ?

[ஆடு கதறுதல்]

புத் :—அட கர்மகாண்டமே, நான் வாதாட வரவில்லை. உங்கள் கத்தியையும் செயலையும் கண்டு அஞ்சிக் குடல் நடுங்கும் இந்த ஜீவனுக்காகப் போராட வந்தேன். என்னுயிர் உள்ளமட்டும் இதை நீங்கள் கொல்லமுடியாது.

கோகர் :—அட பாவி, யாகத்தைத் தடுக்காதே. யாகமில்லாவிட்டால் மழை பெய்யாது. உலகு நசித்துப் போகும்.

புத் :—ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் யாகம் செய்துதான் மழை பெய்கிறதோ ? குண்டல தீக்ஷிதர் யாகம் செய்யுமுன்னே வானம் இல்லையா, மேகமில்லையா, மழை யில்லையா ?

குண்டல :—யாகத்திற்கு அர்த்தம் தெரியுமா ?

புத் :—சொல்லுங்கள்.

குண்டல :-ஆடு, பசு முதலியவற்றைக் கொண்டு....

புத் :—கொண்டு என்ன....கொன்று என்று வெளிப்படையாகச் சொல்லுங்கள்.

கோகர் :—வாயெடுக்கு முன்னே பாய்கிறீரே. கோமேத யாகம், சோம யாகம் முதலியன செய்து முன்னே எத்தனையோ........

புத் :—மன்னர்களை ஏமாற்றினீர்கள்.

குண்டல :—இவனெங்கேயடா வந்தான்? மஹாராஜா, இந்த யாகம் விச்சித்தியாய் விட்டது. இதன் பலத்தில் இவன் மண்ணைப் போட்டான்.

புத் :—இந்த ஆட்டைக் கொன்று, கொழுப்பெடுத்து நெய்யில் பொரித்து உண்பதால் என்ன பலன் வரும்?

குண்டல :—அது ஹவிஸ். யாகப்பிரசாதத்தால் சுவர்க்க இன்பம் கிடைக்கும். நூறு யாகம் செய்தால் இந்திர பதவி........

புத் :—அட பாவிகளா, இப்படி வேதப் பொருளைக் குட்டிச் சுவர் பண்ணி, உலகம் நமது பாரத தேசத்தைக் கண்டு நகைக்கும்படி செய்து விட்டீர்களே! பரம ஞானச் சுரங்கமான வேத வுண்மை, அமர வாழ்விற்கும், சச்சிதானந்த சித்திக்கும் வழி காட்டுகிறது.

கோகர் :—ஓய், கர்மகாண்டத்திலே யாகம் சொல்லப்பட்டிருக்கிறது. வம்பு செய்யாது போ. என் முத்தண்ணு குண்டல தீக்ஷிதரைவிட நீ படித்தவனோ? ஒரு கனம் சொல்லுப் பார்ப்போம். அத்யயனம் பண்ணியிருக்கிறாயா? வேதத்தை எட்டியாயினும் பார்த்ததுண்டா?

புத் :—நான் இங்கே கனம், ஜடை சொல்ல வர வில்லை. சாதாரண மனிதனது பகுத்தறிவு உயிர்க் கொலையை அருவருக்கிறது. அதை நிறுத்த வந்தேன்.

கோகர் :—இவனோடு பேச எங்களால் முடியாது. மஹாராஜாவே, விதாயகம் செய்ய வேணும். யாகம் பின்னமாகி விட்டது. அக்கினிதேவன் கோபித்துக் கொள்ளுகிறான். இந்திரன், "இன்னும் ஏன் ஹவிஸ் வரவில்லை" யென்று சுவர்க்கத்திலிருந்து கேட்கிறான்.

பிம்பி :—பெரியீர், நீர் யாகத்தை மறுக்கிறீரா?

புத் :—இல்லை.

பிம்பி :—பின்னே?

புத் :—கொலையை மறுக்கிறேன்.

பிம்பி :—இந்த ஆட்டை வெட்டாது எப்படி யாகம் செய்வது? யாகத்திற்கு அர்த்தந்தா னென்ன?

புத் :—கேளுங்கள் அப்படி. வேத வாதத்தை யும் விட்டு மனிதனுக்குள்ள இயலறிவால் பேசுவோம்.

ஆணவ வெறியினை அருளுக் கூண்செய்தே
யானென தறமகிழ் அவியுண் டாத்தும
ஞானவிண் ணடைவது நலஞ்செய் வேள்விமற்
றான்சொரி யாகங்க ளுயிர்க்கொ லைகளே.

கோகர் :—வேத தருமத்தை அறிந்து பேச வேண்டும். இது வித்வத் சபை.

புத் :—மனித தருமத்தை யறிந்தே பேசுகிறேன். கேளுங்கள். அந்தணரே, அஞ்ஞான இருளை நீத்து, ஞானவொளி துலக்குவதே வேதம். ஆட்டைக் கொன் றுண்டால் ஞானம் வருமோ? சுவர்க்கம் வருமோ? பகுத்தறிவிற்கு இது ஒக்குமா?

பிம்மி :—பேஷ், சரியான காரணமாகத்தானே யிருக்கிறது !

குண்டல :—ஐயா, எங்கள் முன்னோரான பானு தீக்ஷிதர், அப்பு தீக்ஷிதர், குப்பு தீக்ஷிதர், அவர் ஜேஷ்டர் சுப்பு தீக்ஷிதர்களெல்லாம் மஹாராஜாக்களுக்கு யாகங்களை நிறைவேற்றி எவ்வளவோ சிரேயஸ் அடைந்தார்கள். யாகம் செய்த சுப்பு தீக்ஷிதருக்கு மஹாராஜா பல்லக்கும் விருதும் தந்தார். இன்னும் எவ்வளவோ காரியம் நடந்திருக்கிறது.

புத் :—நடந்தது ஒழியட்டும். இனி இக்கொலை கூடாது. உங்களுக்கு இரக்கமிருந்தால் கேளுங்கள் :

குடிக்கப் பாலும் குளிருக்குப் போர்வையுங்
கொடுக்கு மூமைக் குழந்தையைக் கொல்லவோ ?
தடுக்கொ ணுச்சிறு தம்பியை வாளினல்
மடிக்குஞ் செய்கை மனிதரின் செய்கையோ ?

கோகர் :—இவனெங்கே வந்தான்? பிக்ஷைக் கூடையில் சனியன் புகுந்தது போல, நல்ல யாகம் ; வேண்டிய சன்மானம் பெறலாம் ; நஷ்டமாயிற்று. ஹரிஹீ, வேதத்தில் யக்ஞ சேஷம் விசேஷமெனப்பட்டுள்ளது. யாகத்திற்காகப் பலியிடும் ஆடு மோக்ஷமடைகிறது.

புத் :—அப்படியானல் என்னை அந்த யூபஸ்தம்பத்தில் கட்டுங்கள் ; ஆட்டை விட்டு விடுங்கள். அந்தணரே,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று."

இந்த வேத வாக்கு எப்படி ?

குண்டல :—நாங்கள் சொல்வது வேதமல்லவோ? எங்களைப் பார்த்தால் மனிதராகத் தோன்றவில்லையோ?

புத் :—மனத்தில் இரக்கமில்லா மக்களை, மாக்கள் இனத்தினுஞ் சேர்த்தல் இழுக்கு.

பிம்பி:—பெரியோய், தங்கள் நீதி நன்று; உண்மை யறிந்தேன்; யாகம் நிற்கட்டும். எனின், உணவிற்காக உயிர்களை உபயோகித்தலும் தீதோ? வேத வுண்மை என்ன சொல்லுகிறது?

புத் :—மன்ன, அஹிம்ஸா தருமமே தருமம்.

இன்னாத செய்யாமை யென்னு மொழுக்கத்தாம்
மன்னுயிர்க் கெல்லாம் மறை.

இதுவே வேதம். நன்றாக ஆராய்ந்து பாருங்கள். மனிதனுக்கு உணவாக இயற்கையால் ஏற்பட்டது ஓரறிவுள்ள தாவரமே. அதையும் போதிய அளவே உண்ணவேண்டும். ஒரு கனியைப் பறித்துண்பதால் மரம் சாவதில்லை. கனிகள் ஏராளமாகப் பழுத்து உதிர்ந்துபோகின்றன. உதிர் கனிகளைப் பசியளவு உண் பதே மிகச் சிறந்த உணவு நெறி. அடுத்தபடி, தாவரங் களைச் சமைத்துண்ணல். இவ்வாறு,

பயிரி ருக்கப் பசித்துண்ண, ஐம்புல
வுயி ருக்க வுமக்கிது நீதியோ?
செயிரி லாதஇச் சீவனை வாங்குவோர்
மயிரி னையும் படைத்திட வல்லரோ?

குண்டல :—எல்லாம் சரி. ஒரு பூர்வோத்திரம்; ஒரு சந்தேகம். யாகம் செய்த முன்னோர்கள் சுவர்க் கம் பெற்றிருக்கிறார்களே, அந்தமாதிரி நாமும்........

புத் :—தீக்ஷிதரே, நாம் சுவர்க்கமும் இந்திரபோக மும் பெற,இந்தப்பேதை யுயிரைக் கதறக்கதறக் கொல்ல வேண்டுமா? நமது குழந்தையை அப்படிக் கொல்லு வோமா? இதற்கும் அதற்கும் ஒரே உயிர்தானே.

மேலும் கொலை செய்து சுவர்க்கம் அடையலாமா? விதைத்தது விளையும். செய்வினை தொடரும்.

*வினைவி தையின் விளைமலர் தீதிங்கே*
*தினைய ளவுந்தி றம்பறு மெய்யன்றோ ?*
*முனைந்து கொல்வினை மோட்சங் கொடுக்குமோ ?*
*கனிந்து மெட்டி பலாக்கனி யாகுமோ ?*

எல்லாரும் :—நியாயம், நியாயம். அருளடிகள் வாழ்க ! அடிகளை அனைவரும் அடிபணிகின்றோம்.

[வணங்கல்]

பிம்பி :—அணையுங்கள் யாகத்தீயை ; அவிழுங்கள் ஆட்டை ; கீழே போடுங்கள் கத்தியை.

புத் :—எல்லாரும் பாடுங்கள்.

*அழிக போர்கள் அமர நிலைக்கொளி*
*பொழியும் வேதப் பொருளறி யார்செயும்*
*பழிகள் கோரப் பலிக ளுலகினில்*
*ஒழிக வேரோ டுயிர்க்கொலை யெங்குமே !*

பிம்பி :—அவ்வாறே யாகுக !

குண்டல, கோகர் :—மஹான், பெரியவாள், நமஸ்காரம். குற்றங் குறைகளை மன்னிக்கவேணும். ஏதோ வேதவாதம் பேசினேம் ; தருமத்தை யறிந்தோம், தங்கள் தாஸர்.

புத் :—அன்பர்களே, நீவிர் சிறந்த அருளடியாராகுக!

பிம்பி :—என்னரசில் புலை,கொலை,வேள்வி எதுவும், எவ்விதமான உயிர்க் கொலையும் கண்டிப்பாகக் கூடாவென்று இக்கணம் முதல் விதித்துள்ளோம். நீவிர் சென்று மக்களிடையே ஜீவகாருண்யப் பிரசாரஞ் செய்யுங்கள்.

[வருதல் காயாம்பு]

காயாம்:—சாமி, யாகம் நடந்திடுச்சா? ஆடுங்க போதுமா? இன்னுங் கொண்டு வரட்டுமா?

புத்:—காயாம்பு, இந்தா உன்னுடு கொண்டு போ. இனி ஆடுகளைப் பலியிடுவதில்லை. நீயும் ஆடு கோழி சாப்பிடக்கூடாது.

காயா:—சாமியைக் கண்டவுடனே பயலுக்குப் புத்திவந்திடுச்சுங்க. அதெல்லாம் விட்டுட்டேன்.

புத்:—நீ சாதாரண ஜனங்களிடையே சென்று, சிறு தெய்வங்களுக்குப் பலி கொடுப்பதைத் தடுத்து ஜீவகாருண்யப் பணிசெய்.

காயாம்பு:—எங்கப்பங்ப்ப! எவ்வளவு கருணை! சாமி, நீங்களே என் குலதெய்வம்!

[காலில் விழுகிருன்]

அடுத்த வாரம் காளிக்குப் பலி நடக்கும்; அங்கே போய் அதைத் தடுக்கிறேன்.

பிம்பி:—சபையோ ரெல்லாம் ஜிவகாருண்ய முழக்கத்துடன் எழுந்திருங்கள்.

எல்லாரும்:—

| | | |
|---|---|---|
| பஞ்சமா பாதகங்கள் | வேண்டாம், | வேண்டாம். |
| பதைக்கக் கொலைபுரிய | ,, | ,, |
| வஞ்சகமும் பொய்களவும் | ,, | ,, |
| மற்றுயிரைக் கொன்றருந்த | ,, | ,, |
| புகையிலையும் பொடி சுருட்டும் | ,, | ,, |
| போதை தரும் கட்குடியும் | ,, | ,, |
| நகை மினுக்கி மதிமயக்க | ,, | ,, |
| நங்கையரைக் கற்பழிக்க | ,, | ,, |
| பேராசைப் பெருந்தீனி | ,, | ,, |
| பிறர்க்கென்றுந் தீமை செய்ய | ,, | ,, |

போர்வெறியும் பொன்வெறியும் வேண்டாம், வேண்டாம்.
பொருள்சேர்த்துப் பூட்டிவைக்க ,, ,,
பெரியோரை நிந்தை செய்ய ,, ,,
பெற்ரோரை மனம்வருத்த ,, ,,
வறியோரைக் கொடுமை செய்ய ,, ,,
வாயில்லாச் சீவவதை ,, ,,

எல்லாரும் :—மஹான் கௌதமர் வாழ்க! ஜீவ காருண்யம் வாழ்க!

[எல்லாரும் செல்லல்]

பிம்பி :—அன்புக்கடலே, தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும். தங்களால் என்னரசு புனிதமாகும். தாங்கள் ஓர் இளவரசனைப் போலக் காண்கின்றீர்கள்; இக்கடுந்தவ வேடமேன்? என் மகளை மணந்து, என் அரசை ஆளுக. அடிகாள், என் வேண்டுகோளை நிறைவேற்றி யருள்க.

புத் :—மன்ன, அரசும், செல்வமும், பெண்டிரும் அளிக்கும் இன்பக் கடலில் நீந்தி இளைத்தே துறவணிந்தேன்.

தேவருக் கரிய சீருந் திருவையர் பணியும் வேந்தர்
ஏவலும் பெற்றி ருந்தேன்; இவைநவை யெனவே நீத்திப்
பூவினி துய்ய யோகம் புரிகின்றேன்; அறத்தி ஞட்சி
மேவிடத் தன்னை வென்று பிறர்க்கென விரும்பி வாழ்வேன்.

மன்ன, இன்றே வில்வலங் காட்டிற்குத் தவம் புரியச் செல்லுகின்றேன். அங்கு யான் எண்ணிய தெய்தாவிடின் கயாவிற்கு நேராகச் செல்வேன்.

பிம்பி :—சுவாமிகளே, எனது அரண்மனைக்கு எழுந்தருளுக.

[இருவரும் செல்லல்]

---

# *13. உயிர்ப்பலி நிறுத்தல்

[ஒரு காளிகோயில்; மூக்கும் முழியுமாகக் கோரரூபத்துடன் காளிச்சிலை காண்கிறது. உடுக்கையும், தாளமும் முழங்குகின்றன. பூசாரி காளிக்குத் தீப தூபங் காட்டுகிறான். காத்தையா பலியாடுகளைக் கொண்டுவருகிறான்]

காத்:—காளியாத்தா, பிள்ளைக்குட்டிகளை நல்லா வச்சிக்க; நல்ல கடாக்கள் பலி கொடுக்கிறேன். பூசாரியாரே, இந்தாரும் பூசைப் பணம், பலி போட்டு நல்ல வரம் வாங்கித் தாரும்.

பூசா:—(உடுக்கைக்குத் தக்கபடி பாடிக் கையில் வாளெடுத்து ஆவேசமாக நடிக்கிறான்.)

நல்லபலி தந்துவிட்டாள்—காளியாத்தா
நல்லவரந் தந்திடுவாள்—காளியாத்தா
செல்வங் கொடுத்திடுவாள்—காளியாத்தா
சேமங் கொடுத்திடுவாள்—காளியாத்தா
நல்லகுறி சொல்லுகிறாள்—காளியாத்தா
காளியாத்தா காளியாத்தா காளியாத்தா!

[ஆட்டை வெட்டப் போகிறான்]

[வருதல் ஜீவகாருண்ய சங்கத்தாருடன் காயாம்பு]

ஜீவகாருண்யத்தார்:—(உருக்கமாகப் பாடுகின்றனர்).

பலி கொடுக்காதே—அப்பா - கொலை புரியாதே
ஆட்டைப் பலிகொடுத்தல் ஆகாது பாவமப்பா
கேட்டை விளைக்குமப்பா கெட்ட பழக்கமப்பா (பலி)

[காயாம்பு பலியாட்டைப்பற்றி யிழுக்கிறான்]

---

*இக்காட்சி ஜீவகாருண்யத் தொண்டர் வேண்டுகோளாற் சேர்க்கப்பெற்றது.

பூசாரி :—ஹா, கண்ணைக் கெடுத்திடுவாள் காளி யம்மா! காயலாய் வீழ்த்திடுவாள் காளியம்மா! யாரடா என் பலியாட்டைத் தொடுவது; தாகம்! தாகம்! குடங்குடமாக இரத்தம் குடிக்கவேண்டுமடா! போ வெளியே.

காயாம்பு :—அப்பா, நீ மனிதனா, பேயா? ஏன் இப்படித் தொண்டை கிழிக்கிறாய்?

பூசாரி :—என்மேலே காளியாத்தாள் வந்திருக் கிறாள்; 'கொண்டா ஆயிரம் ஆடு' என்கிறாள்.

காயாம்பு :—காளி, உன் நாக்கிலே வந்து வயிற் றிலே புகுந்து, தொண்டையிலே கூவுகிறாள்....கந்தப்பா, இதெல்லாம் என்ன வேஷம். கல்லை நட்டுக் காளியாம்; வாயில்லாச் சீவன்களைக் கொல்லுவதாம்; அது பூசை யாம்; காளி இரத்தம் குடித்து வரந்தருவாளாம்.

பூசாரி :—அடே, இந்த வருசம் பலிபோடாட்டா, ஊரிலே வாந்திபேதி பிச்சிக்கிடும். அம்மை பொரியும். வேண்டாம்னு சொன்னால், கொள்ளைக் காய்ச்சல் வந்து உன்னைக் கொண்டுபோகும்.

காயாம்பு :—பரவாயில்லை; பயமில்லை; இந்தச் சாது உயிர்களுக்குக் கொள்ளைக் காய்ச்சலாக வராது, அப்புறம் போ; விடு வாளை.

[காயாம்பு கத்தியைப் பிடிக்கிறான்]

பூசாரி :—விடடா வாளை. பரம்பரையாக இரத் தம் குடித்த காளியைப் பட்டினி போடமாட்டேன்.

[வருதல் கசாப்புக் கடைக்காரன்]

கசா :—உமக்கேனையா இந்த வம்பு, அவுங்க அவுங்க சாமிங்களுக்கு அவுங்க அவுங்க இஷ்டப்படி

பூசை போட்ருங்க. நீங்க எட்ட இருந்து பாட்டுப் படிச்சிட்டுப் போங்களேன்.

காயாம்பு :—கந்தப்பனுக்குச் சரியான கசாப்புக் கடைக்காரரே, நீங்கள் இலட்சக் கணக்கான உயிர் களைக் கொலைசெய்து கட்டிக் கொண்ட பாபம் போதாதா? இன்னுமா கொலைசெய்ய வேணும்.

கசா :—போடா அந்தாலே. மகா கொலையைக் கண்டிட்டான். [காயாம்புவைத் தள்ளுகிறான்] பூசாரி, காரியம் நடக்கட்டும்.

[பூசாரி வாளை ஓங்குகிறான்; காயாம்பு ஆட்டை அணைத்துக் கொள்கிறான். ஒரு ஜீவகாருண்யர் வாளைத் தடுக்கிறார்]

ஜீவகாருண்யர் :—ஐயா, உயிர்களுக்கு இரங்குங் கள். நம்மை வெட்டினால் எப்படி யிருக்கும்! அப் படித்தானே அந்த ஊமைப் பிராணிகளுக்கும் இருக் கும்.

பூசாரி :—விடு வாளை; வெட்டு மண்டையிலே விழும்........

ஜீவகா :—நியாயத்தைக் கேள், பிறகு எம்மை வேண்டுமானால் வெட்டு. ஆட்டை விட்டுடு. பலி கொடுக்க வந்தவர்களெல்லாம் கேளுங்கள்.....

[எல்லாரும் உருக்கமாகப் பாடுதல்]

கொலையும் புலையும்வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாபமும்வேண்டாம் „
உலகெல்லாம் ஜீவமயம் „
உயிரெல்லாம் ஒருகுலம் „
கலகஞ் செய்யாது கேளீர் „
கருணை மனிதர்குணம் „

கல்லுக்குக் கண்பிதுக்கி அண்ணமாரே
காளியெனப் பேரிடுவீர் ,,
கல்லை யுடைத்துப்பார்த்தால் ,,
காளி கருப்பனில்லை ,,
பூசை பலிகளெல்லாம் ,,
பூசாரி கற்பனைகள் ,,
மோசம் போகாதிருங்கள் ,,
மூடக் கொள்கைவிடுங்கள் ,,
ஆட்டிலுங் கோழியிலும் ,,
ஆடுமுயிர் நம்முயிராம் ,,
வாட்டி யுயிர்மடித்தால் ,,
வருந்தித் தவிப்போமன்றோ ,,
வாயில்லாச் சீவர்களை ,,
வதைப்பது பாபமன்றோ ,,
தாய்தன் குழந்தையினை ,,
சாக மிதிப்பதுண்டோ ,,
மரக்கறி சாப்பிடலே ,,
மானிடர்க்கு நல்லுணவாம் ,,
இரக்கமில் லாமற்கொன்றே ,,
இரத்தச்சோ றுண்ணவேண்டாம் ,,
நாற்றப் பிணமருந்தல் ,,
நல்ல பகுத்தறிவோ ? ,,
கூற்றினை யஞ்சுகிறீர் ,,
கொல்லுவதேன் உயிர்களை ? ,,
ஆடு மனிதனுகி ,,
அறுத்தாலுங் கழுத்தினை ,,
போடுவீர் கூக்குரல்கள் ,,
பொறுமையாய்ச் சிந்தியுங்கள் ,,

கோழியும் மையறுத்தால் அண்ணமாரே
கூகூவென் றலறுவீர் ”
கோழியைக் கொன்றருந்தல் ”
கொலைக்குற்ற மென்றுணர்வீர் ”
நம்முயிர்போ லெவ்வுயிரும் ”
நன்ரு யிதையுணர்வீர் ”
தம்மைப் போற் பிறரென்பார் ”
தாராளப் புண்ணியர்கள் ”
அன்பை வளர்த்திடலே ”
அனைவர் மதக்கடனும் ”
இன்பம் பெருகிவரும் ”
எல்லார்க்கும் அன்புசெய்தால் ”

காத்தையா :—*நியாயம், நியாயம்! வேண்டா மப்பா உயிர்க்கொலை; என்னுட்டைக் கூட்டிச் செல்லு கிறேன்.*

காயாம்பு :—*அப்பா, நீ நீடூழி வாழ்வாய். ஆட்டை உடனே கொண்டு சென்று காப்பாற்று.*

[*காத்தையா ஆட்டைக் கொண்டு செல்கிருன்*]

பூசாரி :—*அடே, பார் உன் கண்ணைக் கெடுக் கிறேன். ஓர் ஆட்டிற்குப் பத்துப் பேரைப் பலி வாங்கு கிறேன்.*

காயாம்பு :—*கந்தப்பா, துள்ளாதே. அதெல்லாம் அந்த நாளைப் பயங்காளிகளிடம்.*

பூசாரி :—*இந்த ஆடு போனுல் போகட்டும். புலிக் குளத்து ஆடுகள் வரும். காளிக்கு வயிறு குளிரப் பலி போடுகிறேன்.*

காயாம்பு :—*இன்னும் உனக்கு இரக்கம் வரவில் லையா?*

பூசாரி :—எனக்குப் புத்தி சொல்ல நீ ராசாவோ ?

காயாம்பு :—கந்தப்பா, உன் மனம் கல்லப்பா ! உயிர்களுக்கு இரங்கு ; இந்தத் தொழிலை விடு ; இல்லையேல் உனக்குத் தண்டனை கிடைக்கும்.

பூசாரி :—அடே, நான் காளியாத்தா. என் கிட்ட வந்தால் சுட்டிடுவேன்.

[காயாம்பு ஓடிப்போய் ஒரு டாணுக்காரனை அழைத்து வருகிறான்]

டாணு :—யாரிங்கு பலியிடுவது ?

பூசாரி :—ஐயோ! தெரியாதவன் ; மன்னித்திடுங்க!

டாணு :—அரசர் ஆணை தெரியாதோ ?

பூசாரி :—சாடையாகத் தெரியும்........பூராத் தெரியாது.

டாணு:—பிம்பிசார மஹாராஜர் நாட்டிலே உயிர்க் கொலை கூடாது; யாகம், பலி, எதுவும் கூடாது. போடு வாளைக் கீழே.

பூசாரி :—இதோ போட்டுட்டேனுங்க.

[வாளைக் கீழே போடுகிறான்]

காயாம்பு :—கந்தப்பா, இப்போது உன் காளி எங்கே........?

டாணு :—அரசன் கட்டளையை மீறி, உயிர்ப்பலி போடத் துணிந்தாய் ! வா கச்சேரிக்கு.

பூசாரி :—ஐயோ ! வேண்டாம். புத்தி வந்தது. இனி அப்படிச் செய்யமாட்டேன்.

டாணு :—வா என் பின்னால்........

[பூசாரி டாணுக்காரனுடன் செல்லுகிறான்]

காயாம்பு :—தோழர்களே, நமது நாட்டில் பாமர மக்களைச் சிலர் எப்படி மயக்கி மூட வெறி யேற்றுகிறார்கள் பாருங்கள். கல்லை நட்டுக் காளியாம். அதற்கு உயிர்களைக் கொன்று பொங்கல் வைத்தால் நல்லதாம். என்ன மூடக் கொடுமை! காளி இவன் மூலம் வந்து பலி கேட்கிறாளா ? டாணுக்காரனைக் கண்டதும் காளி, மூளி யெல்லாம் காணாமற் போயின. பொது ஜனங்களே, இனி ஏமாறாதீர்கள். அன்பை வளருங்கள்; எல்லாரிடமும் அன்புடனிருங்கள்; உம்முயிரைப்போல உலகுயிரை உணருங்கள். அதுவே சிறந்த வழிபாடு. அன்பு வாழ்க! அறம் வாழ்க!

[காட்சி முடிவு]

---

## 14. கயாக் காடு

[புத்தர் மெலிந்து உலர்ந்து கடுமையான வெயிலில் மயங்கி விழுந்து கிடக்கிறார். சுற்றும் தேள், பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் நடமாடுகின்றன.]

[வருதல் ஓர் ஆட்டிடையன்]

இடையன் :—ஆ, சாமியார்! கட்டை யென்றல்லவோ நினைத்து வீட்டுக்குக் கொண்டுபோக வந்தேன். பேச்சு மூச்சைக் காணோமே. உயிர் இருக்கா ? மூக்குக்கிட்ட நூல்வைத்துப் பார்ப்போம். நூல் அசையிது ; மூச்சிருக்கு. எஞ்சாமி! என்னமா உடல் வத்தி எலும்பெடுத்துப் போச்சு. இதேனிப்படி விழுந்து கிடக்கிறார் ? எழுப்புகிறேன். [கையையடித்து] சாமீ, சாமீ, சாமீஇஇ! பேச்சு மூச்சில்லை. தொட்டெழுப்பலாமா ? ஆத்தாடீ, தொ-ட்-ட-லாமா ? சாமீ, ஐயோ! தெய்வமே, இப்படிக்

கிடந்தால் உயிர் போயிடுஞ் சாமீஇ, சாமீஇ! இப்பவே அரைக்கால் உயிர்தானிருக்கு. உதடு வரண்டு உலர்ந்திருக்கு. வயிறு முதுகைத் தொட்டு எக்கிப்போயிருக்கு. ஒருவேளை பசிக்கிரக்கமோ?—பார்ப்போம். இதோ வெள்ளாயியைக் கூட்டிவாரேன்.

[ஆட்டுடன் வருகிறான்]

இடை :—வா வெள்ளாயீ.

ஆடு :—ஹ்அஅ!

இடை :—சாமியாரு - பாவம் - பட்டினியாலே ஒட்டியுலர்ந்து போயிட்டார்.

ஆடு :—ஹ்அஅ, ஹஅஅ, ஹஅஅ.

இடை:—அவருக்குப் பாலு கொடு.

ஆடு :—ஹ்ஹ்ஹஅ, ஹ்அஅ.

இடை :—தேவ குலம், தொடக்கூடாது. வாய்க்கு நேராக மடியைக் காட்டி நில்லு.

ஆடு :—ஹ்ஹ்ஹ்அ! ஹ்அ!

[ஆடு மகிழ்ந்து நிற்கிறது. இடையன் புத்தர் வாயில் விழும்படி மடியைக் கறக்கிறான்]

இடை :—குடிங்க - எஞ்சாமி - குடிங்க புண்ணியவான் - தருமராஜா - ஆ, பசிக்கிரக்கந்தான்.

[நாக்கைத் துழாவி உள்ளே பாலை இழுத்துக்கொள்ளுகிறார்]

புத் :—ஆ! உலகே, உயிரே, இன்ப வழி என்ன? என்ன?

இடை :—சாமி பேசுது - சந்தோச்சம். சாமி தெண்டம்!

[கும்பிடுகிறான்]

புத் :—என்னருமைச் சகோதரா, நீ வாழ்க!

இடை :—சாமி மன்னிச்சுக்கிடுங்க.

புத் :—எதை ?

இடை :—என் கையினுலே மடியைக் கறந்தேனுங்க. பாலைத் தொடாதே வாயில் விழும்படி ஆட்டைப் பிடிச்சுக்கிட்டிருந்தேனுங்க........

புத் :—பாலைத் தொட்டாலென்ன ?

இடை :—சாமிமாருங்களாச்சே, நாம் தொட்டு ஊற்றலாமா என்று பயந்துதான்........

புத் :—அன்பனே, இந்தப் பொய்ப் பேதங்கள் வேண்டாம். உன்னன்பும், தூய வுள்ளமும், உன்னைப் புனிதனுக்கின. உன் அன்பால் ஊற்றியபால் என் ஆவியைத் தந்தது. அது அமுதம். அன்பே அமுதம்.

இடை :—சாமீ, எங்குடும்பத்தை நல்லா வைக்கணம். கிடைகளை நல்லாவைக்கணம்.

புத் :—உன் மனம் பொன் மனம். மனம்போலே மங்கலம். அன்பனே, உன் குழந்தைகளைப் போலவே ஆடுகளையும் காப்பாற்று. அவற்றின் பாலை மட்டும் பருகு.

இடை :—சாமி, நான் எளியவன். எட்டிலே பத்திலேதான் பனையடிக் கருப்பனுக்கு ஆட்டுப் பொங்கலிட்டு நாங்க சாப்பிடுவது.

புத் :—அப்பனே, அது பாவம்; செய்யாதே; உன் மீது கத்தி பட்டால் எப்படியிருக்கிறது ?

இடை :—சாமி உயிர் போயிடும்.

புத் :—அது போலத்தானே ஆட்டிற்கும் ?

இடை :—ஆமாம். இருந்தாலும்........

புத் :—அப்பனே, உனக்கிருப்பதுபோல அதனுள்ளும் ஓர் உயிர் துடிக்கிறதோ இல்லையோ ?

இடை :—ஆமாம், அது பேசுதில்லையே.

புத் :—அது இரக்கம், இரக்கம் என்று கதறுகிறதே. உனக்கொரு ஊமைத் தம்பி யிருந்தால் அவனைக் கொல்வாயோ ?

இடை :—அப்பாடீ, மாட்டேன்.

புத் :—அதுபோலத் தானே ஆடும். நீ மனிதத் தோல் போர்த்த உயிர். அது ஆட்டுத்தோல் போர்த்த உயிர். உயிர் ஒன்று தான்.

இடை :—பின்னே, பலி போட.

புத் :—அரிசிப்பொங்கல் போடலாம். காய் கனிகள் இல்லையா ?

இடை :—எல்லாரும் ஆடு வெட்டுறுங்களே.

புத் :—வெட்டுகிறவர்கள் அதை என்ன செய்கிறார்கள் ?

இடை :—பொங்கல் வைக்கிறார்கள்.

புத் :—யாருக்கு ?

இடை :—பனையடிக் கருப்பனுக்கு.

புத் :—பனையடிக் கருப்பன் ஒரு பருக்கையேனும் சாப்பிடுகிறானா ?

இடை :—இல்லை. பொங்கல் போடுகிறவர்கள் தான் சாப்பிடுகிறார்கள். பூசாரிக்கு நல்லவரும்படி.

புத் :—யார் அப்படிப்பட்ட பொங்கல் போடுகிறார்கள் ?

இடை :—ஆடு, கோழி சாப்பிடுகிறவர்கள்தான்.

புத் :—அதனாலே ஆடு, கோழி சாப்பிடும் பாவிகள் சாமி பேரை வைத்துப் பொங்கல் போட்டுத் தங்கள் வயிறு புடைக்கச் சாப்பிடுகிறார்கள். கருப்பனும் காட்டேறியும் அதைக் கண்ணாலே கூடப் பார்ப்பதில்லை. நீ கருப்பனைக் கண்டாயா ?

இடை :—ஆமா சாமீ. ஐயனார் கோயில் கிட்ட தினம் காண்கிறேன்.

புத் :—என்ன உயிரோடா ?

இடை :—கல்லுத்தான். ஒரு கல்லை நட்டு கருப்பன் என்று கும்பிடுராங்கள்.

புத் :—இதோ எதிரே இருக்கும் கல்லைக் கருப்பன் என்று கும்பிடுவாயா ?

இடை :—இது கருப்பனாகுமா ?

புத் :—அந்தக் கல்லும் இந்தக் கல்லும் ஒன்று தானே ?

இடை :—அதுக்கு நிதம் பூசைபோட்டுப் பலி போட்டு,........தூபம் போட்டுத் தீபம் போட்டு, காணிக்கை போட்டு....பொங்கல் போட்டு....கும்பிடு போட்டுத் தலைமுறை தலைமுறையா தெண்டம்போட்டு வாரோமே. அது கிட்டப் போனா நம்ம பனையடிக் கருப்பன் என்ற ஒரு பயம் வருகுது.

புத் :—அயர்ந்து தூங்கும்போது அந்தப் பயம் வருகிறதா ?

இடை :—இல்லை ; கண்ணாலே பார்க்கையிலே வருகுது.

புத் :—இந்தக் கல்லைக் கண்ணாலே பார்த்தால் ஏன் அந்த எண்ணம் வருவதில்லை ?

இடை :—மனம் அங்கே அப்படிப் பழகிடுச்சு. இங்கே மனம் செல்லல்லே.

புத் :—அதனால் உன் பயத்திற்குக் காரணம் எது?

இடை :—எல்லாம் மனசுதாஞ் சாமி.

புத்த :—அதனாலே கருப்பன் எங்கே யிருக்கு-கல்லிலா, மனத்திலா?

இடை :—மனத்திலே சாமி.

புத் :—அன்பனே, மனத்தை ஆசை, பொறாமை, கோபம், லோபம் இல்லாத சுத்தமான கண்ணாடி போலச்செய். அதில் இன்பம் விளங்கும். மனத்தில் கொலையும், தீமையும் வைத்துக்கொண்டு, யாரோ ஏற்படுத்திய ஒரு மூடப்பழக்கத்தாலே கல்லுத் தெய்வத்திற்குக் கடாப் பொங்கலிட்டால் நன்மை வராது. பாவமே வரும். பழக்கம் கொடிது. அருள் வழியில் பழகு.

இடை :—தெரிஞ்சு கொண்டேன் சாமி. இனிப் பலியை நிறுத்தி விடுகிறேன். சாமி, நல்ல புத்தி கொடுத்தீங்க.

புத் :—அன்பும், இரக்கமும் புனிதத்தன்மை. கொலையும் கொடுமையும் புலித்தன்மை. அன்பனே, உனக்கு அறிவு வந்தது. நீ சென்று உன் சகோதரருக்கு ஆருயிரன்பைச் சொல்லிக் கொலை மறுப்புச்செய்.

இடை :—ஆகட்டும் சாமி,மனிசன் என்ன நரியா? புலியா? ஆடு சாப்பிட - புத்தி வந்தது.

சாமி இந்தப் புத்தியை விடமாட்டேன். ஊனைத் தொடமாட்டேன் - சாமி தெண்டம்.

புத் :—உள்ளத்தில் அன்பு வளர். உடல் வணக்கம் தேவையில்லை. சரி நீ செல்.

என் அன்புக் குழந்தாய், உன் பாலை என்றும் மறவேன். [ஆட்டைத் தழுவுதல்]

ஆடு :—ஹ்அ அஅ!

[இடையன் ஆட்டுடன் செல்கிறான்]

[புத்தர் ஒரு மரத்தடியில் அமர்ந்து தியானிக்கிறார்]

புத் :—வில்வலங் காட்டில் ஐந்து அந்தணருடன் வேத மாராய்ந்தும் பயனில்லை. கர்ம காண்டத்தினும் ஞான காண்டம் சிறந்ததே. எனினும், நான் தேடும் மருந்து அதிலில்லையே. இறந்த குழந்தையை எழுப்பித் தரவேண்டுமென்று மன்றாடினாள் ஒரு தாய். "அம்மா, யாரும் இறவாது, துயரமே இல்லாத வீட்டில் கொஞ்சம் கடுகு வாங்கிவா. இறந்த குழந்தையை எழுப்பலாம்" என்றேன். அவள் வீடு வீடாகப் பார்த்து, வெறுங்கையுடன் வந்து, "சாவுந் துயரும் இல்லாத வீடில்லை" என்றாள். காணும் முகமெல்லாம் கவலை முகமாயிருக்கிறது. மாந்தர் கவலை என் மனத்தை யழுத்துகிறது. இதற்கு மாற்றென்ன? உயிர்த்துயர் என் துயர், உயிர் மகிழ்வு என் மகிழ்வு.

இயற்கையே, எனக்கு ஓர் உண்மை கூறாயோ?

இளந்தளிர் வேனி லுள்ளம் இசைத்திடுங் குயில்காள், விண்ணை
அளந்துயர் மலையில் வாழு மான்களா, யான்காண் எங்கும்
வளர்நகை மலர்காள், வாடி வருந்திடு முலகைக் கண்டேன்
உளந்தளர் மயக்கந் தீர வுண்மையொன் றுரைத்தி லீரோ!

இன்னும் ஆழ்ந்து தியானிக்கின்றேன்.

[தியானத்தில் ஆழ்ந்திருத்தல்]

[கையில் குழந்தையுடன் பொற்கிண்ணத்தில் அமுது கொண்டு சுஜாதை வருகிறாள்.]

குழ :—அம்மம்மா ! அம்மம்மா ! அப்பப்பா !

சுஜா :—கண்ணா, எம்முத்தூ, உம்மாச்சி கும்பிட்டு, அப்பாகிட்ட போகலாம்.

குழ :—அம்மம்மா, அஅஅ [ஒரு மலரைக் காட்டி]

சுஜா :—பூவேணுமா கண்ணுக்கு ? இதோ பறித்துத் தருகிறேன். [மலர்கொய்து தரல்]

குழ :—எஎஎ.......[மலர்கொண்டுசிரித்து மகிழ்கிறான்]

சுஜா :—வனதேவதையே, உன்னை வேண்டினேன். இச்செல்வனை யளித்தனை. உன்னருள் வாழ்க ! இன்று எனது வழிபாட்டை ஏற்றருள். உனக்குப் பாலடிசில் படைக்கிறேன்.

குழ :—அம்மம்மா! அம்மம்மா! அஅஅ அப்பப்பா!

[குழந்தை புத்தரைச் சுட்டிக் காட்டுகிறது]

சுஜா :—என்ன வேணும் என் அன்புக் கிளிக்கு ?

குழ :—அஅஅ.......அப்பப்பா !

சுஜா :—ஆ! அதோ விளங்குகிறதே வனதேவதை. என் குஞ்சு கொள்ளைச் சமத்து (குழந்தையை முத்திட்டு) இதோ உம்மாச்சி கும்பிடுவோம்.

[பாலடிசிலையும் குழந்தையையும் புத்தர் முன்வைத்து வணங்குகிறாள்]

சுஜாதை :—சோதி மலைபோல விளங்கும் வனதேவதையே, நின்னருளால் வந்த என் செல்வக்கிளியை நின்னடியில் நிவேதிக்கிறேன். என் தெய்வமே, இப்பாலடிசிலை யேற்றருள். [பாலடிசில் தருதல்]

[புத்தர் விழித்துக் குழந்தையை ஆசீர்வதித்து உணவருந்துகிறார்]

புத் :—நின் செல்வமணிப் புதல்வன் நீடு வாழ்க. அன்னையே, யான் வனதேவதை யல்லேன்.

சுஜா :—தங்களிடம் அருட் பொலிவைக் காண்கிறேன். தேவரீரைப் பற்றி யறிய விரும்புகிறேன்.

புத் :—அன்னையே, யான் ஒரு மனித சகோதரன்; யான் ஓர் அரசிளங் குமரன்; உயிரிரக்கம்பற்றி அனைத்துந் துறந்து வந்தேன்; மாந்தர் துயர்தீரும் வழியைச் சிந்தித்து இங்கு வீற்றிருக்கிறேன். அன்னையே தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எனக்குப் பாலடிசில் கொண்டு வந்ததேன்?

சுஜா :—இக்கானகத் தருகில் பல்குனி நதிக்கரையில் சேனானி என்ற சிற்றூருள்ளது. அதில் என் கணவர் ஒரு செல்வர். நெடுநாளாகப் பிள்ளைப் பேறின்றி நான் வனதேவதையை வேண்டிக் கொண்டேன். இதோ இம்மகவு பிறந்தது; அந்த வேண்டுகோளைச் செலுத்தவே இன்று வந்தேன்.

புத்த :—அம்மா, குடும்ப வாழ்க்கை தங்களுக்கு இன்பமா யிருக்கிறதா?

சுஜா :—அருளடிகளே! பிள்ளைக் கவலை தீர்ந்தது. இப்போது மனை வாழ்வு மகிழ்வைத் தருகிறது. என் கணவர் அன்பு மயம். இங்கேயும் அப்படியே. பெரியோய், எங்கள் செல்வத்தைப் போதுமான வரையில் நாங்கள் அனுபவிக்கிறோம். இரப்போர்க்கு இல்லை யென்பதில்லை. ஏழைகளுக்கு எங்கள்வீடு தருமசத்திரம்போலாம். நாங்கள் இடம்பச் செலவு செய்வதில்லை. பிறரிடம் கடன் வாங்குவதில்லை. அறமும் அன்பும் எமது வாழ்வின் இரு

விழிகள் போலும். எல்லாரும் இன்பமாக வாழ வேண்டு மென்றே எப்போதும் சிந்திக்கிறோம். நன்மை நினைத் தால் நலமே விளைகிறது. பிறர் காரியத்தில் நாங்கள் வலு வில் தலையிடுவதில்லை. பிறர்மேல் கோள் பொய் சொல்வ தில்லை. அமைதியாக எங்கள் கடனையாற்றி, அகந்தை யின்றி முடிந்தமட்டும் அறவினை செய்து வாழுகின் றோம். பெரியோய், நல்வழி காட்டி எம்மை உய்விக்க வேண்டும். கண்ணா, சாமியைக் கும்பிடு. [பணிதல்]

குழ :—அப்பப்பா—

சுஜா :—சாமீ இ என்று சொல்லு.

குழ :—லாமீ.

சுஜா :—சாஅ........மீ.

குழ :—ச்லா........மீ, இ.

புத் :—அன்னையே, நின் குழந்தை தீரனாக வாழ்க ! நின் வாழ்வும், அன்பும், தூய மனமும், கவலையற்ற சிந் தையும் எனக்கு இலக்காயின. நின் இல்லறம் நல்லற மாகுக. நீ நின் கணவனுடன் மங்கல மனையறத்தில் இன்புற வாழ்க.

சுஜா :—பற்றற்று வாழ்ந்தால், மட்டற்ற இன் பம் விளையும். பெரியோய், நான் விடை பெற்றுக்கொள் கிறேன். தங்கள் அருள் எங்களை நடத்துக.

புத் :—அருளும் அன்பும் பொருளினும் பேணுக. அன்னையே, சென்று வருக ; மங்களம்.

குழ :—ச்லாலாமீ [கும்பிடுகிறான்]

புத் :—நல்ல மாணிக்கம்.

[புத்தர் ஆசியைப் பெற்றுச் சுஜாதை குழந்தையுடன் செல்லல்]

புத் :—இத்தாயின் வாழ்வு எனக்கொரு புது விழிப்பீந்தது. "அற்றது பற்றெனின் உற்றது வீடு?" ஆசையே துன்ப மூலம்; நான்தேடும் உண்மை என்னுள்ளத்தில் உதித்தொளிருமட்டும் அதோ அந்தப் போதியடியில் இருந்து தியானிக்கிறேன்.

தானே தனக்குப் பகையும் நட்பும்
தானே தனக்குத் தளையும் இன்பமும்.

[செல்லல்]

---

## 15. புத்த ஞாயிறு

[முழு நிலா வீசுகிறது. போதியடியில் புத்தர் ஆழ்ந்த தியானத்தில் வீற்றிருக்கிறார்.]

[கரும் பேய்வடிவு கொண்ட மாரன் வருகிறான்.]

மாரன் :—நான் யார் தெரியுமா? ஏ, தவசீ, சி, அசையக் காணுமே. என்னைத் தப்ப முடியாதுங் காணும். மன்னாதி மன்னர், வீராதி வீரர், வேதாந்த வில்லர்களெல்லாம் என் கையில் கைக்குட்டைபோலடங்குவர். எத்தனைப் பேரையோ பதம் பார்த்த பழைய பேர்வழி நான். நான் மா-ர-ன். உலகம் வளர்வது என்னாலே. யோகப் பித்தரை மோகப்பித்த ராக்குவது என் சாதித்தொழில். சாமிகளைக் காமிகளாக்குவது என் சமர்த்து. எத்தனை மருந்துச் சாலைகள் என்னாலே பிழைக்கின்றன? எத்தனைத் தீனிக்கடைகள், கள்ளுக் கடைகள், விடுதிகள், விதவிதமாக இப்போது என்னாலே பிழைக்கின்றன. சண்டை, சச்சரவு, சாதி, முக்காடு, வம்பு, வழக்கெல்லாம் என் சித்துவேலை. நான் புகுந்தால் மனித மூளை எப்படி வேலை செய்யும் தெரியுமா?

மாந்தர் மனக் குதிரையின் லகான் என் கையிலேதா னிருக்கும். ஒவ்வொருவர் வாழ்விற்கும் கதாநாயகன் நான் ; நாயகி என் மனைவி மோகி. கருப்பை வெள்ளை யாக்குவதும், இளமையை முதுமை யாக்குவதும், நிமிர்ந்த முதுகைக் கூன வைப்பதும், வாலிப விறைப்பு தோல் சுருங்கிக் கோல் பிடித்துத் தள்ளாட வைப்பதும், காதலரைக் கலங்க வைப்பதும், கலந்தவரைப் பிணங்க வைப்பதும், குடும்பச் சண்டை மூட்டுவதும் யார் தெரி யுமா ? நான், மாரன்.

ஆசை, ஆணவம், போர், போட்டி, பொறாமை, வறுமை, மடமை, பொய், பித்தலாட்டம் எல்லாம் என் படைகளே. உலகில் என்னரசை நிலைநாட்டியுள்ளேன். என்னைக் கெடுக்க இந்தச் சாமியார் இங்கே சதியாலோ சனை பண்ணுகிறார்.

நடக்குமா ! சாமியாரே, உமதெண்ணம் பலிக் குமா ? பார்ப்போம்—சாமிக்குள்ளே யிருக்கிற காமி வெளி வந்து, சாமியைச் சாப்பிட்டு ஏப்பம் விடப்போகி றான் பார். சாமி.......கலியாணம் பண்ணிக்கோ.... கண்ணைத் திறக்கமாட்டாயோ ? பிடிக்குது பார் உனக் குச் சனியன். அடி மோகீ, காமினீ, காஞ்சனா, ராகா, த்வேஷா, உங்கள் சகாக்களுடன் பலமான படை கொண்டு வாருங்கள். இவனை அப்படியே உங்கள் வலை யிலே போட்டுக் கட்டி என் கையிலே ஒப்பிக்கவேணும்; எங்கே, நான் மறைந்திருந்து வேடிக்கையைப் பார்க் கிறேன்.

[காமினீ, மோகி, காஞ்சனா முதலியோர் புத்தரைச் சுற்றிக் காமநடம் புரிகின்றனர்]

எல்லாரும் :—

*தேகம் வெறுப்பவர் யார்?—எங்கள் பணி*
*செய்யா தொழிபவர் யார் ?*
*தாகந் தணிந்தவர் யார் ?—காமரஸந்*
*தந்து சலித்தவர் யார் ?*
*மோக வலை விரித்தே—அதில்*
*மூவுலகும் பிடித்தோம்.*
*யோக மலைகளையும்—அம்மானை*
*யுருட்டி யாடிடுவோம் !*

மோகி :—*அடி காமி, நமது கண்பட்டால் மனங் கலங்காதார் உண்டோ ? இதென்ன ஜடமட !*

காமி :—*அது கண்ணைத் திறந்தாலன்றோ கண் வெட்டும். என் துரையே, கண்ணைத் திற. உன்மீது மையலானேனடா ஸாமீ.*

மோ :—*அட நீ ஆடவணு ! காஞ்சனு, உன் பொன் சலங்கையைக் கலகலவென்று குலுக்கு.*

காஞ்ச :—*என்னரசே, உனக்கு எழடுக்கு மாளிகையும், நவநிதியும் இன்பச் சிங்கார வனமும், தாசிகளும், விருந்துகளும் அங்கே வைத்திருந்தேனே ! ஏன் இங்கே வந்து முள்ளிலும் கல்லிலும் திண்டாடுகிருய். உன் தலைச்சுழியா ? வா என்னோடே உன் அப்பன் அழுகிருன். உன் பெண்டாட்டி நாளெல்லாம் முறை வைக்கிருள்...........*

காமி :—*அடா பைத்தியமே,உனக்குக் கிளிபோல, மயில்போல, குயில்போல, தங்கம் போல யசோதரை இருக்கிருள். அழகிய பெண்களிருக்கிருர்கள். அங்கே பாட்டும், ஆட்டமும், விருந்தும், போகமும் விட்டு, ஏனடா இந்தப் பரதேசிக் கோலங்கொண்டாய்? என்ன*

காரியத்திற்காக இந்த அனுதைக் காட்டில் அசையாது உட்கார்ந்திருக்கிருய்? வாடா என் கண்ணே, என் துரையே, ஒரு முத்தந்தாடா - வா ஐயா ஊருக்குப் போகலாம் வா....குழந்தை ராகுலன் 'அப்பா எங்கே?' என்கிருன்.

**போக** :—உஹூம், பலியாது. சரி, எல்லாரும் ஒரு கஜ்ஜலாட்டம் போடுவோம். காஞ்சனு நீ தாளம் போடு, நான் பாடுகிறேன், காமினி நீ ஆடு, ராகத்வேஷா பின் பாட்டுப் பாடுங்கள்....

**மோகி** :—

**[ஸ்ரீ ராக வர்ணம்—ஆதி தாளம்]**

ஏதுக் கிந்த மோடி செய்வாயடா!
ரீகா-கரிசா-சரிசச-நிபமப
நி ச ரி கா-ரிமப-மரீக-ரிசநிச......

[பல அபிநயங்களுடன் வளைத்து வளைத்து ஆடி, முடிவில் வலுவில் தழுவப் போகின்றனர்.
இடையிடையே மோகி, 'கட்டு, வெட்டு' என்று அபிநயம் சொல்லி வைக்கிருள்]

**காமி** :—

ஸாமி ஏதுக்கிந்த - எந்து கிந்த -

என்னைப் பார், என்னழகைப் பார். என் செவ்வாய், புருவ வில், வாட்கண், கூந்தற்புயல், நுண்ணிடை, அன்ன நடை, மின்முறுவல், பொன்னிறம், மென்மொழி, பார், பார்.

**காஞ்சனு** :—அடா பணந்தருகிறேன் என்னைப் பார்.

**மோகி** :—ஊஹூம்; அது சுத்த ஜடம்....தீர்மானமாய் ஒரு கை பாரடீ.

எல்லாரும் :

ஏதுக்கிந்த—ரீகா கரிசா—

காமி :—....என் மனமோகனு....வாடா

புத்தர் :—(விரைந்து விழித்தெழுந்து, கம்பீரமாகநின்று)

ஞானத் திருமலையைக் — காமப்பேயே
நண்ணத் துணிவுமுண்டோ — ,,
வானினும் தூயவரைக் — ,,
வாட்கண் மயக்கிடுமோ — ,,
பாசப் படைகள் கொண்டே — ,,
பகட்டிப் பொருதுகின்றாய் — ,,
ஆசைப் பிசாசை வென்றோர் — ,,
அறிவை யிழப்பதுண்டோ? — ,,

போ, போ, காமமே. போ, போ, போகமே. போ, போ, காஞ்சனப் பேயே. போ, போ, ராகமே. போ, போ, த்வேஷமே. போ, போ, பொய்ம்மையே!

எல்லாரும் :—இவன் வீரன், தீரன், சூரன், கைகாரன்! இவனிடம் நமது சமர்த்துப் பலியாதடீ.

[எல்லாரும் திடீரென மறைதல்]

மாரன் :—(அசரீரியாய்) மாரன் தோற்றான். புத்தா, நீ வென்றாய். ஸம்மாஸம் புத்த: ஸ:

புத் :—மன்த்தை வென்றேன். மாரன் தோற்றான். அவன் படைகள் சிதறியோடின.

[இனி வரும்மொழிகளை இடையிலே தியானத்துடன்மொழிக]

ஆ! உட்கண் மலர்ந்தது. ஓமொலி கேட்டேன். ஒளி கண்டேன். இன்பமுதிக்கிறது. உண்மை, அறிவு, இன்பம்! அறிவுச்சுடரே, புத்த ஞாயிறே, எழுந்திரு. ஆ! என்ன காட்சிகள்!........கல்பங்களும் மஹா கல்பங்

களும் தோன்றுகின்றன....எத்தனை யுலகங்கள், எத்தனை ஆக்கம், அழிவு, பிறப்பு, இறப்பு.......(தியானம்)

ஆ! முற்பவங்கள் தோன்றுகின்றன. எத்தனைப் பிறப்புகள்! பந்தங்கள்!

இந்தப் பந்தனைக்குக் காரணம்? மருந்து?

ஆ! உதிக்கிறது.......உதித்தது அறிவொளி! ஆ! அதன் அழகை, இன்பத்தை என்னென்றுரைப்பேன்! அறிவொளி வாழ்க! புத்தனானேன்! துக்க ஸத்யம் கண்டேன். உலக வாழ்வைத் துயரம் நிழல் போலத் தொடர்கின்றது. பிறப்பு, இறப்பு; உவப்பு, வெறுப்பு; தித்திப்பு, கசப்பு; இன்பம், துன்பம் எல்லாம் வாழ்வுத் தேரில் பூட்டிய புரவிகள். பெயர், வடிவு பெற்ற இந்தப் பூத விகாரங்கள், ஆசையாணவப்பற்றால் துன்புறுகின்றன. கண்டேன் இன்பவழி. சுத்த நிலை பெற்றேன். உலகே, என்னின்பம் உன்னின்பம். என்னறிவொளியால் உன்னிருளொழிக. என்னருமை ஆருயிர்காள், உங்கள் துயரம், என் கண்ணீராகப் பெருகிற்று. உள்ளே உண்மை கண்டேன்; உய்வழி கண்டேன்; மகிழ்வுற்றேன். பூரணம் பொலிந்தது.

வெற்றி பிறந்தது வேட்கை தணிந்து
விலங்கு முறிந் ததுவே!
பற்றற்ற கட்டற்ற மட்டற்ற ஞானப்
பரிதி யெழுந்ததுவே!
சுத்தநிர் வாணச் சுயேச்சை விளைந்தது;
சோகந் தவிர்ந்ததுவே!
புத்ததர் மத்தைப் புகல்வ தினிக்கடன்
பூவுயிர் வாழ்ந்திடவே!

[செல்கிறான்]

# 16. மங்களம்

[புத்தர் நாடெங்கும் தருமோபதேசம் செய்து, ஏழாண்டுகள் சென்று, சீடருடன் கபிலவஸ்துவிற்குப் பிக்ஷுவாக வருகிறார். யசோதரை, ராகுலன், சுத்தோதனன் மூவரும் அவரைச் சந்திக்கின்றனர்]

[ராகுலனும் யசோதரையும் ஒரு பந்தலில்]

ராகு :—அம்மா, என்னோடு விளையாடும் அர்ஜுனன், துருவன், பிரகலாதன் எல்லாரும், 'உன் அப்பா வருகிறார்' என்கிறார்கள். அப்பா எப்போது வருவார் ?

யசோ :—இதோ வருவார். என் செல்வமே, நம்மை அன்றிரவு பரிதபிக்க விட்டுச் சென்று ஏழு வருஷங்கள் கழித்து வருகிறார்.

ராகு :—அப்பா ஏன் அப்படிப் போனார் ? நம்மைப் பார்த்தால் அவருக்குப் பிடிக்கவில்லையா ?

யசோ :—இல்லையடா கண்மணி, அவர் அன்பு மயம்.

ராகு :—அன்பு மயமென்றால் நம்மைவிட்டு ஓடிப் போகலாமா ?

யசோ :—நான்கூட அப்படித்தான் நினைத்தேன் அப்போது. இப்போதுதான் காரணம் தெரிந்தது. நம்மைப்போல எல்லாரிடமும் அவருக்கு அன்புண்டு. எல்லாரும் உலகிலே பலவிதமாகத் துன்பப்படுகிறார்களல்லவா............

ராகு :—ஆமாம்மா. என்னோடே விளையாடும் பையன்கள் தமது வீட்டுச் சண்டைகளைக் கதை கதையாகச் சொல்லுவர். அதற்கு இவர் ஓடுவானேன்.

யசோ :—தனியாகப் போய்த் தியானம் பண்ணினால் இன்பவழி உதிக்கும். அப்பா அந்த இன்பவழி கண்டு, எல்லாருக்கும் சொல்கிறார்.

ராகு:—ஆமாம்மா எல்லாரும் அப்பாவை, 'புத்தர், புத்தர்' என்று சொல்லி வணங்குகிறார்களாம்........... அர்ஜுனன் சொன்னான். அம்மா, அப்பா எப்படியிருப்பார்? தாத்தா மாதிரியா?

யசோ :—அவர் அழகை எப்படியடா உனக்கு வர்ணிப்பேன்? என் கண்ணே, அதோ பார் சூரியோதயம் மாதிரி வருகிறார்.

[தெருவில் பெரிய முழக்கம்—சீடருடன் புத்தர் கப்பறையேந்தி வருதல்]

எல்லாரும் :—

'ஓம் நமோ தஸ்ஸ
பகவதோ அரஹதோ
ஸமமாஸம் புத்த: ஸ
புத்தாம் சரணம் கச்சாமி
தம்மாம் சரணம் கச்சாமி !
சங்கம் சரணம் கச்சாமி'

[யசோதரை குழந்தையுடன் புத்தரைப் பணிகின்றாள்]

யசோ :—என்னுயிரே, என்னுயிர்க்கின்பமே, என்னறிவே, என்னறிவுச் சுடரே, அறிவுப்பரிதியே, தங்களைக் கண்டதும் மாசு நீங்கிப் புனிதமானேன்; புத்தச் சுடரிற் குளித்துப் புதியளானேன்; புதுப்பிறவி பெற்றேன். யசோதரை இனித்தங்கள் அடியாள்.

ஆனந்த ஜோதி யருள்வெள்ளம் பாய்ச்சியென்னுள்
ஞானப் பயிர்வளர்ப்பாய் ஞானச் சிகாமணியே!
பொல்லா மனமாயைப் பூண்டுதனை வேரோடுங்
கெல்லாயுன் பார்வையினாற் கீர்த்திச் சிகாமணியே!

இன்றென்று நாளையென்று மேமாற்றங் கொள்ளாமல்
என்றென்று நிற்குநிலை யீவாய் சிகாமணியே !
மண்ணுகு வாழ்வை மதியாதுன் முத்தியின்பங்
கண்ணுகி நிற்கவருள் காட்சிச் சிகாமணியே !

புத் :—யசோதரா, உன் மனம் பக்குவமடைந்தது. புத்த தர்ம சேவகியாக வாழ்க.

யசோ :—என் ஞான குருவே, அவ்வாறே தங்கள் பணிசெய்து மகிழ்வேன்.

ராகு :—அம்மா, இவர்தான் அப்பாவா ?

யசோ :—இனிச் சாமி என்று கூப்பிடு.

புத் :—ஆ ! இது ராகுலனு ? ராகுலா, உன் வாழ்வு புத்த தாரகையாகப் பொலிக !

ராகு :—சாமீ..........நமஸ்காரம்.

[காலில் விழுதல்]

புத் :—செல்வனே, நீ ஞானமணியாக விளங்கு.

[வருதல் சுத்தோதனன் அரசவுடையுடன்]

சுத் :—என்ன கோலம் ! என்ன காலம் ! அரசாளுவானென்று ஆசைப்பட்டேன். பரதேசியாக என் முன் நிற்கிறுனே ! என் சினத்திற்கு அளவில்லை. காஷாயத்தைக் கிழித்தெறிகிறேன்.

புத் :—தந்தையே, வணக்கம்.

சுத் :—ஆமாம். உன் வணக்கமும் முழக்கமும் யாருக்கு வேண்டும் ? என் நெஞ்சு பொறுக்கவில்லை. பசிக்கு வைத்திருந்த உணவைப் பிராந்து கொத்திச் சென்றுற்போலிருக்கிறது. அரசிற்கொருபிள்ளை ; முடி தரித்து உன்னை அரியணையில் வைத்துப்பார்க்க ஆசைப்பட்டேன்; ஏமாந்தேன். உன்னைப் பெற்றதும் ஒன்றுதான் ; பெருததும் ஒன்றுதான்.

புத் :—தந்தையே, அநித்தியமான இப்புவியரசை நீத்தேன். கானகத்தில் அரசுவீற்றிருந்து, நித்தியமான ஆனந்த அரசைப் பெற்றேன். சீலம், சமாதி, ப்ரக் ஞானமாகிய மூவழி கண்டேன். இன்று ஆருயிர்கள் மோக தாகமொழிந்து, இன்புறத் தொண்டு செய்து வருகிறேன்.

சுத் :—இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. என் செல்வனே, என் மனம் பதைக்குதடா. பட்டத்திற் குரியவன் இப்படிக் காஷாயமும் கப்பரையுமாகத் திரிவது அழகோ ?

சீருயர் கல்வி, சிறந்துயர் வீரம்,
பாருய ராட்சி, பழுத்துய ரின்பம்,
பேருய ரான்ற பெரும்புக ழெல்லாம்
சூரிய மைந்த துறப்பது நன்றோ ?

அப்பனே, உன்னை எவ்வளவு செல்வச் சிறப்பில் இன்ப விண்ணில் வைத்திருந்தேன் ! ஐய, நீ ஏன் காட் டிற்குச் சென்றாய் ?

சிந்தூர முந்திய சேவடி யேனோ
வெந்துயர்க் கானக மேவிய தைய ?
சுந்தரப் பூண்கள் சுடர் மணி மேனி
கந்தை யுடுத்திடக் காண்விதி யென்னே ?

புத்த :—தந்தையே, வருந்த வேண்டா. நின் மண் ணரசு கால வெள்ளத்தில் கரைந்து போகும். என் அருளரசு, தர்மராஜ்யம், உலகுள்ள மட்டு மிருக்கும். தந்தையே,

சுற்றி மதிற்படு சோம்புடைச் செல்வப்
பற்றின் விலங்குகள் பட்டென விட்டே

பெற்றனன் முற்றிய பேரறி வின்பம்
பெற்றினி தோங்குக பெற்றவ நீயும்.

தந்தையே, உலகில் ஏழை உயிர்கள் படுந்துயர் என்னுயிரிற் புகுந்தது.

பீழை படும்புவிப் பேற்றை முனிந்தேன்
ஏழை படுந்துய ரென்றய ரென்றே
யூழி கடந்தென் குலப்பெய ரோங்க
வாழுயிர் யாவு மகிழ்வழி கண்டேன்.

தந்தையே, அருளாட்சியே என் பணி; புவி யாட்சி யல்ல.

உன்னர சாள வுதித்தன னல்லேன்;
என்னர சாள வெழுந்தொளி கண்டேன்;
மன்னர சாட்சியின் வான்பொரு ளுள்ளேன்;
தன்னர சாட்சி தழைத்தரு ளின்பம்.

சுத்:—அறிந்தேன்; அறிந்தேன். ஏ மஹாத்மா, என் புன்னரசு மின்னென மறையும். எத்தனையோ அரசுகள் கால வெள்ளத்திற் கரைந்தொழிந்தன. உன் அருளாட்சியே என்றும் நின்று நிலவும். உன்னைச் சரணடைந்தேன்.

[பணிதல்]

புத்:—

தூய்மை யுறுக! தூய்மை யுறுக!
தருமச் சுடரெனத் தந்தை வாழ்க!
வாய்மன யாக்கைத் தூய்மை யுறுக!
மனத்தை யடக்குக! மாரனை வெல்க!
சினவெறி யொழிக! சீலம் போற்றுக!
எல்லா வுயிர்க்கும் இனியன செய்க!
நல்லன நாடுக! நல்லினஞ் சேர்க!

அன்பே செய்மின் ; அறவழி நடமின் ;
இன்ப மாகும் எல்லா வுயிர்க்கும்.

எல்லாரும் :—புத்தம் சரணம் கச்சாமி ! தம்மம் சரணம் கச்சாமி ! சங்கம் சரணம் கச்சாமி !

" மாரனை வெல்லும் வீர நின்னடி,
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி,
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி,
அறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி,
*எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி,
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி,
தீமொழி கடந்த செவியோய் நின்னடி,
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி "
வணக்கம் வணக்கம் ! வாழிய புத்தர் !
வாழிய தருமம் ! வாழிய சங்கம் ! வாழிய கருணை !

சாந்தம் ! சுபம் !! மங்களம் !!!

---

சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றிய
**புத்தர் கருணை** என்னும் நாடகம்
முற்றிற்று.

---

*எண்ணத்தைக் கடந்த பெருமையனே.

# அன்பு நிலய நூல்கள்

(சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியவை)

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | பைந்தமிழ்ச்சோலை | ... | 0 | 4 |
| 2. | இராமலிங்க விஜயம் | ... | 0 | 10 |
| 3. | இன்பமாலை (2-ம் பதிப்பு) | ... | 0 | 5 |
| 4. | தருமஸாதனம் | ... | 0 | 4 |
| 5. | பொதுநெறி | ... | 0 | 2 |
| 6. | இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | ... | 0 | 2 |
| 7. | திருக்குறளின்பம் (ராப்பர்) | ... | 1 | 4 |
| | ,, (காலிகா) | ... | 2 | 0 |
| 8. | உடலுறுதி (படங்களுடன்) | ... | 1 | 0 |
| 9. | வரகவிதாகூர் | ... | 0 | 3 |
| 10. | அப்பரின் அன்பு வெற்றி (நாடகம்) | ... | 0 | 10 |
| 11. | புதுமையும் பழமையும் (நாடகம்) | ... | 0 | 8 |
| 12. | திருநூல் - தூயவாழ்வு | ... | 1 | 0 |
| 13. | தியானமாலை | ... | 1 | 4 |
| 14. | ஏழைபடும்பாடு (நாவல்) (அச்சில்) | ... | 1 | 4 |
| 15. | யோகசித்தி | ... | 2 | 8 |
| | ,, (Calico) | ... | 3 | 0 |
| 16. | பரமஹம்ஸ லீலை | ... | 2 | 8 |
| 17. | ரமணவிஜயம் | ... | 2 | 0 |
| 18. | பெரியார் வரலாறு | ... | 2 | 0 |
| 19. | பாரதி விளக்கம் | ... | 0 | 4 |
| 20. | நாடகக்கலை விளக்கம் | ... | 0 | 2 |
| 21. | கீதைகாட்டும் பாதை | ... | 0 | 10 |
| 22. | பாரத சக்தி | ... | 1 | 8 |
| 23. | அரவிந்தப் பிரகாசம் | ... | 0 | 12 |
| 24. | புதுயுகப்பாட்டு | ... | 0 | 5 |
| 25. | The Yoga of Sri Aurobindo | ... | 2 | 0 |
| 26. | Mahatma Ramalingam | ... | 1 | 0 |
| 27. | அருளமுதம் (அச்சில்) | ... | 2 | 0 |
| 28. | தமிழுணர்ச்சி | ... | 1 | 0 |
| 29. | புத்தர் கருணை | ... | 0 | 8 |
| 30. | ஸ்ரீ அரவிந்த யோக தீபிகை | | 0 | 8 |

## கிடைக்குமிடங்கள்

1. A. R. அண்ணுமலை,
அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம்,
(திருச்சி ஜில்லா)

2. முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.

3. ஜனமித்திரன், புதுக்கோட்டை.

4. சைவ சித்தாந்தக் கழகம்,
திருநெல்வேலி, சென்னை.

5. பாரதிப்பிரசுராலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

6. பாரதசக்தி நிலயம், புதுச்சேரி.

7. திரு. M. நடராஜஞ் செட்டியார்,
47, மார்கெட் தெரு, சிங்கப்பூர்.

8. பாரதி பிக்சர் பாலஸ்,
கல்லுக்கட்டி, காரைக்குடி.

9. Sjt. Rama Subbiah,
No. 116/117, Keyker St., Colombo.

10. E. M. கோபாலகிருஷ்ணக் கோனர்,
புதுமண்டபம், மதுரை.

11. ஹிகின்போதம் அண் கோ., சென்னை.

12. நவீனகதா புத்தகசாலை, இரங்கோன்.